Registered as a NewsPaper

இலவச பிரதி

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

விலை ரூபா : 8.00

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-21 04-06-2005 சனிக்கிழமை ஓசை 106

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12121)

– திருமலையில் குவிக்கப்பட்டுள்ள படையினரை வெளியேற்ற வலியுறுத்தல் –


# தமிழர் தாயகப் பிரதேசம் ஹர்த்தாலினால் நேற்று முற்றாகச் செயலிழந்தது

## இராணுவக் காவலரண்கள் சில எரிப்பு

*திருமலையில் புத்தர்சிலை வைக்கப்பட்டமையையடுத்து அங்கு குவிக்கப்பட்ட சிறிலங்கா படையினரை வெளியேற்றக்கோரி நேற்று தமிழர் தாயகப்பகுதியில் பூரண ஹர்த்தால் இடம் பெற்றது. இதனால் நேற்றையதினம் அனைத்துச் செயற்பாடுகளும் முற்றாக ஸ்தம்பித மடைந்தன. ஹர்த்தாலுக்கு இடையூறாக இருந்த படையினரின் காவலரண்கள் சில எரிக்கப் பட்டன.*

திருகோணமலை நகரில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மேலதிக இராணுவத்தினர் வெளியேற்றப்படவேண்டுமென தமிழர் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை 24 மணி நேரத்திற்குள் நிறைவேற்றப்படும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப்பட்ட உறுதிமொழி இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இதனை அடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை திருகோணமலையில் கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், திருகோணமலை தமிழ்மக்கள் பேரவை மற்றும் சமூக சமய அமைப்புக்களின் பிரதிநிதிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)



## சீனன்குடாவில் விமானப்படை தாக்குதல் இரு தமிழ் இளைஞர்கள் படுகாயம்!

(திருமலை)

திருமலையில் சிறிலங்கா விமானப்படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இரு தமிழ் இளைஞர்கள் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சீனன்குடாவிலுள்ள மிட்சுபிசி சீமெந்து தொழிற்சாலை அருகே நேற்று பிற்பகல்1.50மணிக்கு இந்த துப்பாக்கிச்சூட்டுச்சம்பவம் நடந்தது.

இதில் ரவி, சத்தியசீலன்என்ற இருதமிழ்இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில்திருமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தவர் என்றும் கைக்குண்டை எடுத்துச் சென்றபோது இந்தச் சம்பவம் நடந்ததாகவும்சிறிலங்கா பொலிசார் தெரிவித்தனர்.இருப்பினும் இதை தமிழீழ விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் திருமலை வைத்தியசாலைக்குச் விரைந்து அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இளைஞர்களைசந்தித்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## விசேட அதிரடிப்படை தாக்குதல் தந்தையும் மகனும் காயம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் காரைதீவில் நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உந்துருளியில் பயணம் செய்துகொண்டிருந்த தந்தையும் மகனும் காயமடைந்து கல்முனை தெற்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை காரைதீவு சந்தியிலுள்ள ஈ.பி.டி.பி. யின் மாவட்ட அலுவலகம் மீது சம்பவதினம் இரவு இனந்தெரியாத

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரு நாட்டுப்பற்றாளர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம்

கடந்த 26.12.2004 அன்று முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்டஇயற்கை அனர்த்தம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் சொர்ணலிங்கம் (புன்னலிங்கம் சொர்ணலிங்கம் வட்டுவாகல், (முல்லைத்தீவு) என்பவரே சாவடைந்தவராவார்

கடந்த 30.04.2005 அன்று சுகவீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் குமரகுரு

(சின்னத்தம்பி- குமரகுரு (சுழியோடி வைரப்பா),வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம் ) என்பவரே சாவடைந்தவராவார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## தம்பிலுவில் அரசியல்துறை அலுவலகத்தினுள் அத்து மீறி சிறிலங்கா அதிரடிப்படை தேடுதல்!

*– விடுதலைப்புலிகள் கடும் கண்டனம்*

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்ட தம்பிலுவில் என்னுமிடத்திலுள்ள விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல்துறை அலுவலகம் நேற்று மாலை 6.30 மணியளவில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்புக்கும் தேடுதலுக்கும் உள்ளானது.

நேற்று நண்பகல் இந்த அலுவலகத்தில் விசேட அதிரடிப்படையினர் தனியாகச் சென்று தேடுதல் நடத்த முற்பட்ட போதிலும் அதற்கு விடுதலைப்புலிகள் அனுமதியளிக்காததையடுத்து மாலையில் பொலிசாரையும் அழைத்துச் சென்று போர் நிறுத்தக்கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் இந்தத் தேடுதல் நடத்தப் பட்டது.

ஆயுதங்கள் மறைத்து வைக்கப் பட்டிருப்பதாகக் கூறியே இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆனால் அங்கு அப்படி எந்த ஆயுதமும் கைப்பற்றப்படவில்லை என்று விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை திருக்கோவில் பொலிஸ் தரப்பும் உறுதிப் படுத்தியது.

தமது அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட இந்தத் தேடுதல் நட

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை இந்தியா ஆதரிக்கும் புலிகளின் பங்கேற்பையும் எதிர்க்காது

*-சிறிலங்கா சனாதிபதியுடனான சந்திப்பின் பின் கருத்து*

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளைக் கட்டியெழுப்ப உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பிற்கு இந்திய அரசாங்கம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

மூன்று நாள் பயணமாக இந்தியா சென்றிருக்கும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இந்திய பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி மற்றும் இந்திய பெற்றோலிய அமைச்சர் மணி சங்கர் ஐயர் ஆகியோர் உட்பட பல தலைவர்கள் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்புக்கள் தொடர்பாக நேற்று வெளியிடப்பட்ட இந்திய சிறிலங்கா கூட்டறிக்கையில் இரு நாட்டு ஒத்துழைப்புக்கள் குறித்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தப் பொதுக்கட்டமைப்பில் புலிகள் இடம் பெறுவது குறித்து இந்தியா வெளிப்படையாக எதுவும் குறிப்பிடாவிட்டாலும், விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை



(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறில.வின் விமான எதிர்ப்பு வலையமைப்பை நவீனமயப்படுத்த இந்தியா இணக்கம்


பிரதமர் மன்மோகன்சிங்கிற்கும்,சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது சிறிலங்காவிடம் உள்ள விமான எதிர்ப்பு வலையமைப்பை நவீனமயப்படுத்துவதற்கும் இது தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கும் இந்தியப் பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளிடம் உள்ள் விமானப்படையினால் ஏற்படும் அச்சுறுத்தல்களில் இருந்து சிறிலங்காவைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.இதேவேளை விடுதலைப்புலிகளிடம் உள்ள பலமான கடற்படை மற்றும் விமானப் படை என்பன பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக இரு நாட்டுத் தலைவர்களும் கூட்டாகக் கருத்து வெளியிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

# நேற்று இடம்பெற்ற ஹர்த்தாலின்போது...


திருகோணமலையில்....



கிளிநொச்சியில்....



யாழ்ப்பாணத்தில்....


## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

உதயநகர் கிழக்கில் வசிக்கும் கணேஸ்வரநாதன் பத்மலோஜன் என்பவரது அடையாள அட்டை (இல 830121315V) கிளிநொச்சியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
(6231)

### சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

4ஆம் கட்டை, மல்லாவி வீதி, வன்னிவிளான்குளத்தில் இயந்திரத்தால் செய்த சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு.

5" x 6" x 12" - ரூபா 23.00
4" x 6" x 14" - ரூபா 20.00
(6210)


## அம்பியூலன்ஸ்கள் வழங்கல்

மன்னார் முருங்கன் வைத்தியசாலைக்கும், கிராமிய விடத்தல்தீவு வைத்தியசாலைக்கும் நிகொட் நிறுவனத்தினால் நேற்று முன்தினம் திருகோணமலையில் வைத்து ஒவ்வொரு அம்பியூலன்ஸ் வண்டிகள் வழங்கப்பட்டன. இதனால் நோயாளர்களை ஏற்றிச்சென்று அயலிலுள்ள பெரிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. (18)


### 45ஏக்கர் காணி குத்தகை

கிளிநொச்சி மாவட்டம் பிரதான வீதியிலுள்ள மூவருக்குச் சொந்தமான 45 ஏக்கர் ஊறுதிக்காணி (1940-50களில் மாடு, ஆடு பெரிய பண்ணை) நீர்ப்பாசனமுடையது. பல வருட குத்தகைக்கு ஒப்பந்தத் தில் தனியாருக்கு/நிறுவனத் திற்கு வழங்கப்படும் தகைமைவிபரத்துடன் தொடர்புகொள்ளவும், தொலைபேசி 0712318673 (5379)


## நுளம்புவலைகள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி, அக்கராயன் வன்னேரிக்குளம், ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவுகளில் வதியும் மக்களுக்கு நுளம்புவலைகள் வழங்கப்பட்டுள்ளன.

வன்னேரிக்குளம் கிராமசேவை அலுவலர் பிரிவில் 401குடும்பத்தினருக்கும், ஸ்கந்தபுரம் கிராமசேவை அலுவலர் பிரிவில் 715 குடும்பங்களுக்கும், அக்கராயன் கிராம சேவை அலுவலர் பிரிவில் 751 குடும்பங்களிற்குமாக 2282 குடும்பங்களுக்கு நுளம்புவலைகள் வழங்கப்பட்டுள்ளன.தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினதும் மலே ரியா தடைஇயக்கத்தினதும் அனுசரணையுடன் குளோபல் நிதியுதவியுடன் சர்வோதய நிறுவனம் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து மேற்படி கிராம மக்களுக்கு நுளம்புவலைகள் வழங்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வவுனியா சின்னப்புதுக்குளம் பகுதியில் 85 வீடுகள் கட்ட மூலப்பொருட்கள் வழங்கல்

வவுனியா சின்னப்புதுக்குளம் பகுதியில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு நோர்வே நாட்டின் வெளிவிவகார அமைச்சின் அகதிகளுக்கான அமைப்பு 85 வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அந்த அமைப்பினால் இரண்டு இலட்சம் பெறுமதியான பொருட்கள் வழங்கப்படுகிறது. வீட்டின் உரிமையாளர்கள் தமதுபங்களிப்பின் ஊடாகவே மேற்படி வீடுகளைக் கட்டிமுடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த மக்கள் தற்போது படிப்படியாக மீளக் குடியமர்ந்து வருகின்றார்கள். வீடுகள் அனைத்தும் இராணுவத்தினால் அழிக்கப்பட்ட நிலையில் தற்காலிகமான கொட்டகைகளில் வாழ்ந்து வரும் இந்த மக்களுக்கு இவ்வாறு ஒருதிட்டம் மூலமாக வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக அந்த அமைப்பின் பிரதிநிதி தெரிவித்தார்.

தற்போது வீட்டுப்பணிகள் விரைவாக நடந்து வருவதாகவும், அந்த மக்களின் முயற்சியால் அந்த வீடுகள் கட்டப்படுவதன் காரணமாக அவர்கள் மனதாரத் திருப்தி அடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (21)

## விசேட மருத்துவ சிகிச்சையும், ஆலோசனையும்

ஐக்கிய இராட்சியத்திலிருந்து (U.K) வருகை தந்திருக்கும் வைத்திய நிபுணர் டாக்டர் ஜெகராசா அவர்கள் நாளை புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் தொய்வு (ஆஸ்துமா), சயரோகம், உயர்குருதி அமுக்கம் ஆகிய நோய்களுக்கான சிகிச்சைகளையும்,ஆலோசனைகளையும் வழங்கவுள்ளார். பயன் பெறும் நோயாளிகள் டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை புதுக்குடியிருப்பு வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்புகொள்ளவும்

## கண் சத்திரசிகிச்சைக்கு சமுகம் தர கோரிக்கை

எதிர்வரும் 24.06.2005 அன்று புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் கண்சத்திரசிகிச்சை நடைபெறவிப்பதனால், ஏற்கனவே பதிவுசெய்து துண்டு வழங்கப்பட்டவர்கள்அன்றைய தினம் பி.ப. இரண்டு மணிக்குப் பின் நேரடியாக மருத்துவமனைக்கு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். மேலும் அன்றையதினம் கண்சத்திர சிகிச்சை செய்வதற்கு புதிதாகப் பதிய வேண்டிய நோயாளர்கள் 08.06.2005, 15.06.2005 (புதன்கிழமை) ஆகிய தினங்களில் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையிலும்09.06.2005, 16.06.2005 (வியாழக்கிழமை)கிளிநொச்சி பொன்னம்பலம்மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவிலும் தொடர்பு கொள்ளுமாறு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்கிறார்கள்.


**university of Jaffna**
**improving Relevance and Quality of Undergraduate Education (IRQUE)**
**Intensive course in English Language SKILLS**
**Test on English Language SKILLS**

The above test which was scheduled to be held on 04 th June 2005 has been postponed to 11 th June 2005 at 9.30 am

(சி.12183)

IRQUE Project
University of Jaffna

Deputy Director,
Administration.

(சி-12183)



## நெஞ்சுருகும் ஓராண்டினிலே

மழலையாக 10 - 01 - 1964



மணநெகிழ்வாக 04, 05 - 06 - 2004



மழலையாக 21 - 02 - 2004

**விசுவநாதன் - தெய்வேந்திரன்**
(கண்ணன்/தெய்வா)

**தெய்வேந்திரன் அஜந்தினி**
(அஜந்தா)

மாசார், பளை.

மகிழ்ச்சியில் எனைத் தினம் மலர வைத்த செல்வங்களே – நான்
தனி நிற்க மழலையுடன் மறைந்த உம் பரிதாபம் தாங்குவேனோ?
விழி நீர் சொரிய வேதனையால் துடிக்கின்றேன் கண்ணே
அன்பே.... அருமைக்குட்டியே... –நான்
ஆணி வேரறுந்து கிளை முறிந்து படும் மரமாய் வாடுகின்றேன்.
விரைவில் எனையும்.....

வேதனைத் துயரில் தவிக்கும்
அன்பு
மனைவி/தாய்

(6230)

# ஐரோப்பாவுக்கு பொதுவான அரசியல் சட்டம்

# நெதர்லாந்து மக்களும் ஏற்க மறுத்தனர்

(ஆம்ஸ்டர்டாம்)

**ஐரோப்பிய நாடுகளுக்குப் பொதுவாக ஒரே அரசியல் சட்டம் தேவை இல்லை என்று பிரெஞ்சு மக்கள் வாக்களித்திருந்த நிலையில் நெதர்லாந்து நாட்டு மக்களும் பிரெஞ்சு நாட்டு மக்களை அதற்கு பின்பற்றி கருத்துத் தெரிவித்துள்ளனர்.**


25 ஐரோப்பியநாடுகள் ஒன்று சேர்ந்து ஐரோப்பிய ஒன்றியம் என்ற பெயரில் தனிப் பொருளாதார அணியாகவுள்ளன. இந்த நாடுகளுக்கு என்று யூரோ என்று தனி நாணயமுள்ளது. இது போல ஐரோப்பிய நாடுகளுக்கு என்று பொதுவாக ஒரே அரசியல் சட்டம் கொண்டு வரப்பட இருக்கிறது.

இதற்கு ஒன்பது நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. எஞ்சியுள்ள நாடுகளில் அந்நாட்டு மக்களின் கருத்தை அறிவதற்காக வாக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. பிரான்சில் சமீபத்தில் நடந்த வாக்கெடுப்பில் அந்த நாட்டு மக்கள் இந்தப் பொதுச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து நெதர்லாந்திலும் வாக்கெடுப்பு நடந்தது. 62 சதவீதமனோர் இதில் கலந்து கொண்டுவாக்குப்போட்டனர். 80 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் 61.8 சதவீதம் பேர் பொதுச்சட்டத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர். 38.2 சதவீதம் பேர் ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

நெதர்லாந்தும் எதிர்த்து வாக்களித் திருப்பதால் அது பொதுச்சட்டத்துக்கு சாவு மணி அடித்தது போலதான் என்றும் அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நெதர்லாந்துப் பிரதமர் ஜோன் பீற்றர் போல் கெனன்டே கூறுகையில், இந்த முடிவு ஏமாற்றம் அளிப்பதாகத் தெரிவித்தார். "இரண்டு முக்கியமான நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதால் பொதுச் சட்டத்துக்கு சமாதி எழுப்பியாகிவிட்டது." என்று எதிர்க்கட்சித் தலைவர் வுட்டர்பாய் கூறியுள்ளார்.



அமெரிக்காவில் கலிபோர்னியா கடலோரத்தில் உள்ள லகுனா பீச்சில் திடீரென்று ஏற்பட்ட நிலச்சரிவில் ஆடம்பர வீடுகள் இடிந்து விழுந்த காட்சி.



அவுஸ்திரேலியாவிலுள்ள புஸெல்டன் தீவில் 85இற்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள் கரை ஒதுங்கின. இவற்றை அங்குள்ள ஏராளமான சமூக ஆர்வலர்கள் மீண்டும் கடலுக்குள் கொண்டு செல்ல முயற்சி எடுத்தனர். இதனால் 20இற்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள் மீண்டும் கடலுக்குள் உயிருடன் அனுப்பி வைக்கப்பட்டன.

# 400பலஸ்தீனக் கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்தது

கடந்த பெப்ரவரியில் இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையில் போர்நிறுத்த உடன்பாட்டினைத் தொடர்ந்து கிட்டத்தட்ட 400 பலஸ்தீனியக் கைதிகளை இஸ்ரேல் விடுதலைசெய்துள்ளது. இஸ்ரேலியச் சிறைச்சாலைகளில் 7500 இற்கும் மேற்பட்ட கைதிகள் உள்ளனர். மேலும் 900 கைதிகளை விடுதலை செய்வதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் பலஸ்தீனத் தலைவர் முகமட் அபாசிடம் உறுதியளித்திருந்தார். ஆனால் இரண்டாம் தடவை விடுவிப்பிற்கு இஸ்ரேல் பலஸ்தீனியத்தை இராணுவத் தாக்குதலை நிறுத்தக் கோரியிருந்தது. இதனால் இவ்விடுவிப்புத் தாமதமடைந்துள்ளது. இவர்களில் இருவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட 398 பேர் நேற்று முன்தினம் இஸ்ரேலால் விடுதலை செய்யப்பட்டு பேருந்து மூலம் மேற்குக்கரை, காசாப் பகுதிக்கும் கொண்டு செல்லப்பட்டனர். அப்பொழுது அவர்கள் பலஸ்தீனியத்திற்குள் நுழைந்ததும் வெற்றி அடையாளம் காட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். விடுவிக்கப்பட்ட ஒருவர் றமல்லா சோதனை சாவடியருகில் வைத்து செய்தியாளருக்குக் கூறுகையில், நான் விடுவிக்கப்பட்டதில் சந்தோசமடைகின்றேன்.



ஆனால் சிறையிலுள்ள ஏனைய ஆயிரக்கணக்கானோரும் விடுவிக்கப்படவேண்டும் எனவும் கூறினார்.

# சூடானில் விமான விபத்து ஐந்து பயணிகள் உயிரிழப்பு

சூடானில் கார்ட்டுன் நகரில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்ற விமானமொன்று புறப்பட்ட ஒரு சில நிமிடங்களில் வீழ்ந்து நொருங்கியதில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

இயந்திரக் கோளாறு காரணமாக விமானத்தை விமானி அவசர அவசரமாகத் தரை இறக்க முயன்றார். ஆனால் அதற்கு முன்னதாகவே விமானம் விமான நிலையத்தின் அருகிலேயே விழுந்து நொருங்கியது. இதில் அந்த விமானத்தில் இருந்த பயணிகளில் ஐந்து பேர் பலியானார்கள். மேலும் சிலர் காயமடைந்தனர்.

# அதிகாரிகளின் இலஞ்ச ஊழல் காரணமாக ஆண்டு தோறும் 600 கோடி ரூபா இழப்பு

(இஸ்லாமபாத்)

இலஞ்ச ஊழல் காரணமாக பாகிஸ்தான் அரசுக்கு ஆண்டு தோறும் ரூ.600 கோடி இந்திய ரூபா இழப்பு ஏற்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானிலும் இலஞ்ச, ஊழலுக்குப் பஞ்சமே இல்லை. கீழ் மட்டத்தில் இருந்து அரசின் உயர் பதவிகளில் இருக்கும் அதிகாரிகள், அரசியல்வாதிகள் வரை இலஞ்ச ஊழல் சர்வ சாதாரணமாகப் புகுந்து விளையாடுகிறது.

இலஞ்ச ஊழல் காரணமாக ஏற்படும் விளைவுகள் பற்றி பஞ்சாப் மாகாணத்திலுள்ள இலஞ்ச ஊழல் கண்காணிப்பு இயக்கம் ஆய்வு நடத்தி தனது அறிக்கையை அரசுக்குத் தாக்கல் செய்துள்ளது. அந்த ஆய்வு அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

பொதுமக்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள் ஆகியோரின் இலஞ்ச ஊழல் காரணமாக பாகிஸ்தான் அரசுக்கு ஆண்டு தோறும் ரூ.600 கோடி இழப்பு ஏற்படுகிறது.

வரி செலுத்தாததன் காரணமாகத்தான் அரசுக்கு அதிக இழப்பு ஏற்படுகிறது. வரி செலுத்தாமல் அதிகாரிகள் உடந்தையாக இருப்பதே இதற்கு காரணம்.

இது தவிர பொதுத்துறை நிறுவனங்களிலும், வங்கிகள், தொழில்துறை, ஆணையத்தில் இலஞ்சம் காரணமாகவும் அரசுக்குக் கூடுதல் இழப்பு ஏற்படுகிறது. நாட்டின் பொருளாதாரத்தையே இது சீர் குலைக்கிறது. கடந்த பல ஆண்டுகளில் ரூ.1,35,800 கோடி பணப் பரிமாற்றத்தில் ரூ.33,300 கோடி இந்திய ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

வரி வசூல் முறையில் குளறுபடி இருப்பதாகவும் இதில் மாற்றங்கள் கொண்டு வர வேண்டியது அவசியம் என்றும் அந்த அறிக்கையில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு வழங்கிய கடன்களில் 90 சதவீதம் இன்னும் வசூல் ஆகாமலேயே இருக்கிறது. இதற்கும் அதிகாரிகளின் மெத்தனப் போக்கும், ஊழலும்தான் முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.



ஈராக்கில் பகுவபா மாகாண சபைத் தலைவரான ஹூசைன் அல்வான் அல் டமினி குண்டுத்தாக்குதலில் பலியான சம்பவ இடத்தை அவதானிக்கும் பொலிசார்.

# தாதி மீது பாலியல் வல்லுறவு என கிளிங்டன் மீது புதிய குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

அமெரிக்கமுன்னாள் சனாதிபதி பில்கிளிங்டன் தாதிஒருவரை பாலியல்வல்லுறவு செய்ததான புதிய குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பில்கிளிங்டனுக்கு எதிராக அடிக்கடி ''பாலியல்'' குற்றச்சாட்டுக்கள் கூறப்படுவதுவழக்கம். வெள்ளை மாளிகையில் பணி புரிந்த மோனிக்கா லெவின்ஸ்கி என்பவருடன் அவரைஇணைத்து வெளியான "பாலியல்" குற்றச்சாட்டுகள் ஏற்கனவே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் தாதி உட்பட மேலும் ஏழு பெண்களுடன் அவருக்கு இருந்த "பாலியல்" தொடர்பு பற்றி புதிய புத்தகம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது. கிளிங்டன் வல்லுறவுக்குட்படுத்தியதாகக் கூறப்படும் அந்தத் தாதியின் பெயர் ஜானிதா பிராட்ரிக் கடந்த 1978 ஆம் ஆண்டில் கிளிங்டன் ஆர்கன்சாஸ் மாநிலத்தில்அரசு வக்கீலாகப் பணிபுரிந்தபோது தாதி ஜானிதா பணிபுரிந்த மருத்துவமனைக்குச் சென்றார். இருவரும் பேசிக்கொண்டு இருந்தபோது "பத்திரிகையாளர்களின் தொல்லையை தவிர்ப்பதற்காக, நாம் உன் அறையில்அமர்ந்து 'காபி'சாப்பிடலாமே" என கூறி அறைக்கு அழைத்துச்சென்று தன்னை அவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி விட்டதாக ஜானிதா பிராட்ரிக் குற்றம் சாட்டியிருக்கிறார்.

# அமெரிக்காவில் நிலச்சரிவு 18 வீடுகள் இடிந்து வீழ்ந்தன

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவில் கலிபோர்னியா கடலோரத்தில் உள்ள லகுனா பீச்சில் திடீரென்று ஏற்பட்ட நிலச்சரிவில் 18 ஆடம்பர வீடுகள் இடிந்து விழுந்தன. காலை ஏழு மணிக்கு இந்தச் சம்பவம் நடந்தது. கிட்டத்தட்ட 20 வீடுகள் ஓரளவு பாதிக்கப்பட்டன. இந்தப்பகுதியில் மேலும் நிலச்சரிவு ஏற்படும் என்று அஞ்சப்பட்டதால் 350 வீடுகளை அதிகாரிகள் அகற்றினர்.

## -திருமலை கிண்ணியா கூவா நகரில்-

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மூவின மக்களுக்கு த.பு.கழகம் தற்காலிக வீடுகள் கையளிப்பு

நோர்வே அரசின் நிதிப்பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மிக மோசமான அனர்த்தத்திற்குள்ளான கிண்ணியாப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கூவா நகரில் மூவின மக்களுக்கும் 250 தற்காலிக வீடுகள் கொண்ட திட்டமிடப்பட்ட மாதிரிக் குடியிருப்பை அமைத்து மக்களிடம் கையளித்தது. கடந்த புதனன்று பிற்பகல்




3.00 மணியளவில் திருகோணமலை மாவட்ட திட்ட அலுவலர் கலைவர்ணன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன, மத, பேதங்களைக் கடந்து நின்று தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பணியாற்றி வருகின்றது. நலன்புரி நிலையங்களில் மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்து குடியேற்றுவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வில் நம்பிக்கையையும், எதிர் பார்ப்பையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்படுத்தி வருகின்றமை தெரிந்ததே.

கையளிப்பின் ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து அகவணக்கமும், முஸ்லிம் சமய வாழ்த்துப் பாடலான "கிராத்தும்" ஓதப்பட்டன. வீட்டுத் திட்டத்திற்கான பெயர்ப்பலகையினை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் திரைநீக்கம் செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டி சேன நாயக்கா உட்பட சிலர் திறந்து வைத்தனர்.

இதனையடுத்து அங்கு கூடியிருந்த மூவின சமூகத்தவர்களாலும் இப்பணி தொடர்பாக நன்றியும் மன நிறைவும் கலந்து கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. கிண்ணியா உலமாசபைத் தலைவர் ஜனாப் ஏ.ஆர்.மசார் மௌலவி அவர்கள் உரையாற்றுகையில்; கிண்ணியாவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எவ்வித பாரபட்சமுமின்றி தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சேவை புரிவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் உரிய காலத்தில் இத்தற்காலிக வீடுகளை அமைத்ததற்காக தாம் புனர்வாழ்வுக்கழகத்திற்கு நன்றியைத் தெரிப்பதாகவும் கூறினார்.


திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தனது கருத்துரையில்; தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கிண்ணியாவில் அமைத்த இத்தற்காலிக வீடுகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு நன்மை தருவதுடன், தமிழ், முஸ்லிம் மக்களின் நல்லுறவையும் இணக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளதென்றார். தொடர்ந்து வீட்டைப் பெற்ற 250 குடும்பங்களுக்கும் தலா 1000 ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிண்ணியா வைத்திய அதிகாரி ஜனாப் சமீம், கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியின்பன், தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப்பணிப்பாளர் விஜயகுமார், கிராம அலுவலர் ஜெனாப் ஹனியா, கிண்ணியா உலமா சபைச் செயலாளர் ஜெனாப் ஹதியத்துல்லா, தமிழர் புனர்வாழ்வுக் கழக நெறியாளர் சபை உறுப்பினர் ஜனாப் சாகுல் ஹமீது, கிண்ணியா உலமா சபைத்தலைவர் ஜனாப் ஏ.ஆர்.மசார் உட்பட அரச பிரதிநிதிகள், பொலிஸ்அதிகாரிகள், பொது மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

# மூன்று நோயாளர் காவு வண்டிகள் வைத்தியசாலைக்கு வழங்கல்

## சாரதிகள் நியமனம் இல்லை

கிளிநொச்சி சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் மூன்று வைத்தியசாலைகளுக்கு மூன்று நோயாளர் காவு வண்டிகள் கையளிக்கப்பட்டுள்ளன.



கிளிநொச்சி சுகாதாரத்திணைக்களத்திற்கு நிகொட் நிறுவனத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்ட இம்மூன்று நோயாளர் காவு வண்டிகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் மூன்று வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை காலை 10.00 மணியளவில் கிளிநொச்சி சுகாதாரத்திணைக்களத்தில் வைத்து நிகொட் நிறுவனத்தின் பொறியியலாளர் குகதாசன், கிளிநொச்சி மாவட்ட நிகொட் திட்டப் பணிப்பாளர் பார்த்தீபன் ஆகியோர் நோயாளர் காவுவண்டிகளை கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் த.சத்தியமூர்த்தி, பிராந்திய தொற்று நோயியலாளர் க.நந்தகுமார் வைத்தியர் த.சதானந்தன், வைத்தியர் யூடிறமேஸ் ஜெயக்குமார் ஆகியோரிடம் கையளித்தனர்.

இவற்றை கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் மூன்று வைத்தியசாலைகளுக்கு சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்பட்டன. கிளிநொச்சி சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு ஐந்து நோயாளர் காவுவண்டிகள் தேவையாக உள்ள நிலையில் இம்மூன்று வண்டிகளே கிடைத்துள்ளபோதும் இவற்றை இயக்குவதற்கான சாராதிகள் நியமிக்கபபடாததால் இவற்றை பயன்படுத்துவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச,கு)

# மன்னார் பொது வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறையினால் சிரமம்

## -பொறுப்பேற்ற சில நாட்களிலேயே இடமாற்றம் பெறும் ஊழியர்கள்

மன்னார் பொது வைத்திய சாலையில் தொடர்ந்து ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

அண்மையில் நியமனம் செய்யப்பட்ட பெண்தாதி உத்தியோகத்தர்கள் ஒருவாரத்திற்குப் பின்னர் சுகாதாரத் திணைக்களத்தினால் திருப்பியழைக்கப்பட்டவேளை இங்கு பணிபுரியும் சிங்களவைத்தியர்கள் தமது முதல் நியமனத்திற்காகவே மன்னார் பொதுவைத்தியசாலையில் வந்து தமது பதவியை உறுதி செய்து விட்டுபின்னர் வேறு இடத்திற்குச் சென்று அடுத்த மாதத்தில் சுகாதார அமைச்சில் இருந்து இட மாற்றக் கடிதத்துடன் வருவதால் இவ்வைத்தியசாலையில் நோயாளர்களிற்கு சிறந்த வைத்தியம் செய்ய முடியாதிருப்பதாக மாவட்ட பொது வைத்தியசாலை பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (18)

## -நிகொட் திட்டத்தின் கீழ்

# மன்னார் மாவட்டத்திற்கு ஒதுக்கிய நிதியில் 36 மில்.ரூபா செலவிடப்பட்டது

மன்னார் மாவட்டத்தின் 2005 ஆம் ஆண்டின் அபிவிருத்திக்கென நியாப் திட்டத்திற்கு 260 மில்லியன் ரூபாவை உலக வங்கி வழங்கியுள்ளது.

இந்நிலையில் இதுவரை 36 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. குளங்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள், விவசாயிகளின் அடிப்படைத் தேவைகள் என்பவற்றுக்கே இந்நிதி செலவிடப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. (18)

# செம்மலை கிழக்கு மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

(செம்மலை)

எக்கோ, கெயார் நிறுவனங்களின் நிதியுதவியில் முல்லை. மக்கள் நலன் புரிச்சங்கத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட செம்மலை கிழக்கு மீனவர்கள் 38 பேருக்கு தலா ரூபா 20000 பெறுமதியான ஒரு தொகுதி மீன்பிடி உபகரணங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டுள்ளது. தொகுதி தொகுதியாக இவ்உபகரணங்கள் மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக முல்லை. மக்கள் நலன்புரிச் சங்க இணைப் பாளர் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நிறுவன இணைப்பாளர், பணியாளர்கள், சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுத்தலைவர் மயில்வாகனம், கெயார் நிறுவன வெளிக்கள அலுவலர் சிவகுமார், கெயார் நிறுவனப் பணியாளர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (20)

# தாய், சேய் போசாக்கு நிலையத்திற்கு சூரிய மின்கலத் தொகுதி அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கனடாவில் வசித்துவரும் சுப்பிரமணியம் குடும்பத்தினரால் அக்கராயன் ஆரோக்கியபுரத்தில்




அமைந்துள்ள அ... தாய்சேய் போசாக்கு நிலையத்திற்கு சூரிய ...ின்கலத்தொகுதி அன்பளிப்பு ...யப்பெற்றுள்ளது.

...ந்த வாரம் மேற்படி ஐம்பத்தி எண்ணாயிரம் ரூபா பெறுமதியான மின்கலத்தொகுதியினை சுப்பிரமணியம் குடும்பத்தினர் சார்பாக தர்மிலா மற்றும் சாந்தலிங்கம் ஆகியோர் நிலைய துணைத் தலைவர் சபாரட்ணத்திடம் போசாக்கு நிலையத்தில் வைத்து கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# செஞ்சோலை மாணவர்களுக்கு சூரிய மின்கலம் கையளிப்பு

செஞ்சோலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மூன்று சூரிய மின்கலங்கள் ரெக்(யு.எஸ்.ஏ) அனுசரணையுடன் பொருண்மிய மதியுரையகத்தால்.வழங்கப்பட்டன.

மேற்படி சூரிய மின்கலங்கள் இரணைமடுவில் அமைந்துள்ள செஞ்சோலையில் செஞ்சோலை அலுவக முகாமையாளர் செல்வி. ஆ. செல்வா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## இராணுவச் சிப்பாய் தற்கொலை

மட்டக்களப்பு-பொலன்நறுவை வீதி மியான்குளம் இராணுவ மிகாமில் கடந்த புதன்காலை இராணுவச் சிப்பாயொருவர் தனக்குத் தானே வெடிவைத்து தற்கொலை செய்துள்ளார்.

முகாம் கூரையில் சுருக்கிட்டு தொங்கியவாறு தனக்குத்தானே துப்பாக்கியால் சுட்டு இவர் தற்கொலை செய்துள்ளதாக வாழைச் சேனை பொலிசார் தெரிவிக்கின்றார்கள்.

# தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வுக்கு அழைப்பு

(அலுவலக செய்தியாளர்)

அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும், சங்கம நிகழ்வும் இன்று அக்கராயன் கோணாவில் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் விடுதலைப்புலி முக்கிய உறுப்பினர்களின் கருத்துரைகளும் "மண்ணின் மைந்தர்கள்", வீரமுரசு கலை நிகழ்வு மற்றும் கலை பண்பாட்டுக்கழக மகளிர் பிரிவினரின் சங்கநாதம் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் வேண்டியுள்ளனர். (சோ)

# கடற்றொழிலுக்கு படையினர் "பாஸ்" கெடுபிடி; வலிகாமம் மேற்கில் 1150 குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா கடற்படையினரது பாஸ் கெடுபிடிகள் காரணமாக வலிகாமம் மேற்கு பிரதேசசெயலாளர் பிரிவில் வாழ்ந்து வரும் 1150 கடற்றொழில் குடும்பங்கள் தொழில்ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.**

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பொன்னாலை, மாதகல், சுழிபுரம் போன்ற கடற்கரை பிரதேசங்கள் சிறிலங்காப் படையினரால் அதிஉயர்பாதுகாப்பு வலயம் என்றபோர்வையில் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

இதனைச் சாட்டாக வைத்து மேற்படி கடற்பரப்புகளில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடச் செல்வோர் மீது அதிகபட்சபாஸ் கெடுபிடிகளை மேற்கொள்கின்றனர்.

இந்தக் கெடுபிடிகளுக்கு அஞ்சி இப்பகுதிக்கடற்றொழிலாளர்கள் பலர் தம் கடற்றொழில் நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளதுடன், சிலர் ஒழுங்கான முறையில் கடற்றொழிலுக்குச் செல்வதில்லை.

இதனால் இப்பகுதியைச் சேர்ந்த 1150 குடும்பங்களின் சுமார் 3000 அங்கத்தவர்கள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப் படுகிறது. (33)

## கச்சாயில் இராணுவ புலனாய்வுத்துறையினரால் பொதுமக்கள் வழிமறிக்கப்பட்டு விசாரணை

கொடிகாமம் கச்சாய் சந்தியில் உள்ள சிறிலங்காப் படைமுகாமில் உள்ள இராணுவப் புலனாய்வுத் துறையினரால் இப்பகுதியூடாகச் செல்லும் பொதுமக்கள் வழிமறிக்கப்பட்டு நீண்ட நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றனர்.

கச்சாய், கெற்பலி,பாலாவி, பிரதேசமக்களும் வெளியிடங்களில் இருந்து வரும் பொதுமக்களுமே இம் முகாம் அருகே வழிமறிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றனர். படையினரின் இந்த நடவடிக்கைகள் குறித்து பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (28)

## மாணவர் எழுச்சிநாளுக்கு சென்ற மாணவர்களுடன் பொலிசார் முரண்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழமாணவர் எழுச்சி நாளைக் கொண்டாட நேற்று முன்தினம் வடமராட்சியில் இருந்து வந்த பாடசாலை மாணவர்களுடன் இராணுவப் பொலிசார் முரண்பட்டுள்ளனர்.

தமிழீழ தேசியத்தலைவரின் படங்களுடன் பேருந்தில் வந்த இம் மாணவர்களை வல்லைப்பாலத் தடியில் பேருந்தில் இருந்து இறக்கி அவர்களை சோதனை செய்ய வேண்டும் எனவும் பேருந்தை சோதனையிட வேண்டும் எனவும் படையினர் கூறியுள்ளனர்.

இதனை அடுத்து மாணவர்களும், ஆசிரியர்களும் இராணுவப் பொலிசாருடன் கடுமையாக முரண் பட்டுள்ளனர். இறுதியில் சுமுகநிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (41)

## தென்மராட்சி-வடமராட்சி பகுதிகளில் சமகால அரசியல் கருத்தரங்குகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் தொடர்ச்சியாக கிராம பிரதேச ரீதியாக சமகால அரசியல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றது. மாறி வரும் இராணுவ அரசியல் சூழ்நிலைகள் தொடர்பாகவும் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மீதும் தமிழர் பிரதேசங்கள் மீதும் சிறிலங்கா அரசும் அதன் படைகளும் மேற்கொண்டு வரும் படுகொலைகள், ஆட்கடத்தல், பொது மக்களின் இயல்பு வாழ்வுக்கு குந்தகம் ஏற்படுத்தல், மரண அச்சுறுத்தல், மிரட்டல், பாலியல் வல்லுறவு, மாணவிகள் பெண்கள் மீது தொடர்ச்சியாக படையினர் மேற்கொண்டு வரும் உளவியல் ரீதியான பிரச்சினைகள், ஆயுதக்குழுக்களுக்கு அடைக்கலம் கொடுத்தல், குழு மோதல்களை ஏற்படுத்தல், இளைஞர்களுக்கு மது பானங்கள் வழங்கல், போதை பொருட்கள் ஆபாசத் திரைப்படங்கள் வழங்குவது தொடர்பாக இக் கூட்டங்களில் பொது மக்களுக்கு விரிவாக கருத்துரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இக் கூட்டங்களில் துறைசார்ந்தவர்களும் அரசியல் துறைப் பொறுப்பாளர்களும் பொது அமைப்புகள் தேசிய எழுச்சிப் பேரவை பேராளர்களும் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கி வருகின்றனர். (28)

## முன்பள்ளி முதன்மையாசிரியர்களுக்கு புங்குடுதீவில் வதிவிடப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் ஐ.ஒ.எம்நிறுவனத்தின் ஆதரவுடன் வடகிழக்கு மாகாணமுன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தால் முதன்மையாசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி நடத்தப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட வலிகாம கல்வி வலயத்திற்குட்பட்ட 35 முதன்மை ஆசிரியர்களுக்கு புங்குடுதீவு சர்வோதய நிறுவனத்தில் இப்பயிற்சி நடத்தப்பட்டது. தீவக வலய இணைப்பாளர் செல்வி. யாழினி தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

## இரு கிராமங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் சங்கானைப்பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வட்டுக் கோட்டை தெற்கு மற்றும் வண்ணபுரம் ஆகிய இருகிராமங்களும் நியாப் திட்டம் IIஇன் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்த ஆண்டு யாழ் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நியாப் திட்டம் II இன் கீழ் மேற்படி இருகிராமங்களிலும் வீதி அமைப்பு, உவர் நீர் தடுப்பு அணை அமைப்பு,சுயதொழில் மேம்பாடு, மற்றும்கிராமஅபிவிருத்தித் திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப் படவுள்ளன. (33)

## இரட்டைப் பதிவு வாகன பிரச்சினையை தீர்க்க யாழ். குடாநாட்டில் நடமாடும் சேவை

(யாழப்பாணம்)

இரட்டைப் பதிவுள்ள வாகனங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கும் மிக விரைவில் நடமாடும் சேவை ஒன்று நடத்தப்படவுள்ளதாக உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

2003 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நடமாடும் சேவையின் போது 500-,501- என்ற தொடர் இலக்கங்களில் பதிவுசெய்யப்பட்ட சில வாகனங்களுக்கு ஏற்கனவே வாகன பதிவு இலக்கங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இவற்றின் மூலம் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக விரைவில் நடமாடும் சேவை ஒன்று நடாத்தப்படவுள்ளது. எனவே வாகனங்களின் இரட்டைப் பதிவுப் பிரச்சினைகள் உள்ளவர்கள் மோட்டார் பதிவுத்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

ஏற்கனவே பதிவு செய்து அதற்கான புத்தகங்கள் கிடைத்தவர்கள் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவது தொடர்பான பிரச்சினைகள் உள்ளவர்கள் தமது பிரச்சினைகளை எழுத்து மூலம் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் கச்சேரியில் இயங்கும் மோட்டார் போக்கு வரத்து திணைக்களத்திற்கு அறிவிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (சு)

## ஊழியர் சேமலாப நிதியைப்பெற பதிவுகளை மேற்கொள்க

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதியை மீளப் பெறுவதற்கான விண்ணப்பத்தினை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து ஆறு மாத காலத்திற்கு மேற்பட்டும், இதுவரை நிதிகிடைக்கப் பெறாதவர்கள் பத்தாம் திகதிக்கு முன்பாக யாழ்ப்பாண மாவட்டத் தொழில் அலுவலகத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உதவித்தொழில் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## "தார்" விலை அதிகரிப்பால் வீதித்திருத்த வேலைகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய வீதித்திருந்த வேலைகள் பலவும் "தார்" விலை அதிகரிப்பு காரணமாகப் பாதிப்படைத் திருப்பதாக உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வீதிகளை செப்பனிடுவதற்காக பயன்படுத்தப்படும் ஒரு பீப்பாய் தாரின் விலை இதுவரை காலமும் 3670 ரூபாவாக இருந்தது எனினும் தற்போது இது 6606 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பிரதேச சபைகள் தம்மால் நிர்வாகிக்கப்படும் வீதிகளைச் செம்பனிடுவதற்காக "தார்" பீப்பாய்களை அதிகவிலை கொடுத்தே கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் இதற்கேற்ப வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக பிரதேச சபைகளுக்கென ஒதுக்கப்படும் நிதி அதிகரிக்கப்படாதுள்ளதாலும், உள்ளூராட்சி சபைகளுக்கு கிடைக்கும் வருமானம் மிகக் குறைவாகவே இருப்பதாலும் இந்த வீதிகளைச் செப்பனிடும் பணிகள் பாதிப்படைந்திருப்பதாக பிரதேச சபை செயலாளர்கள் தெரிவிக்கின்றனர். (33)

## சுகாதார சீர் கேட்டை நீக்கும் படி மாநகரசபை ஆணையாளரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆனந்த குமாரசுவாமி மகளிர் விடுதிக்கு அண்மையில் இராணுவத்தினராலும், பொதுமக்களாலும் கொட்டப்படும் கழிவுகளால் அப் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது. இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும் படி யாழ்மாநகர சபை ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக உள்ளக விடுதி மாணவ ஒன்றியம் இக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இப்பகுதியில் தொடர்ச்சியாக கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதால் அப்பகுதி வீதியால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது உள்ளதோடு விடுதியில் வசிக்கின்றவர்கள் பெரும்அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அத்தோடு இதனால் பல்வேறு நோய்த் தாக்கங்களும் ஏற்படுகின்றன. இது தொடர்பாக பல தடவைகள் உரியவர்களிடம் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டும் இது வரைக்கும் எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (36)

## குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு

யாழ். தீவகத்தில் தற்போது குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு தோன்றியுள்ளது. தற்போது நிலவிவரும் கடும் வெப்பமான காலநிலை காரணமாக தீவகப்பகுதிகளில் உள்ள நன்னீர் கிணறுகள் பலவும் வற்றியிருப்பதனாலேயே இந்தக்குடிநீர் தட்டுப்பாட்டுநிலைமை தோன்றியுள்ளது.

குறிப்பாக புங்குடுதீவு, அனலைதீவு, ஊர்காவற்துறை, காரைநகர் போன்ற பகுதிகளிலேயே இக்குடிநீர் தட்டுப்பாடு தோன்றியுள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் தமது குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக நீண்ட தூரத்திற்கு அப்பாலுள்ள கிணறுகளை நாடிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. (33)

## பயணிகளிடம் திருட்டுக்கள் தொடர்ச்சியாக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பேருந்துகள் மற்றும் சிற்றூர்திகளில் பயணம் செய்வோரிடம் தொடர்ச்சியாக பணம், கையடக்கத் தொலைபேசிகள், நகைகள் திருடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நெருக்கடி மிகுந்த பயணங்களின் போது சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி இலகுவாக இத் திருட்டு சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. பெண்களுடைய கைப்பைகளில் இருந்தும் பெருந்தொகையான பணம் பெறுமதிமிக்க நகைகள் சமீபகாலங்களில் திருடப்பட்டுள்ளன.

இது குறித்து பொது மக்கள் விழிப்புடன் இருக்கும் படியும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## பயணிகள் பேருந்தில் 17 பவுண்நகை திருட்டு

(யாழ்ப்பாண்ம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கைதடிக்கு பேருந்தில் வந்த ஒருவரிடம் இருந்து 17 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன.

குடும்ப விசேடவைபவம் ஒன்றுக்காக யாழ்ப்பாணத்தில் நகைக் கடையில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு கொண்டு வரப்பட்ட நகைகளே இவ்வாறு களவாடப்பட்டுள்ளன. கைதடி வந்து பார்த்த பொழுதே பை திறக்கப்பட்டு நகைகள் களவாடப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. (28)

## அடையாள அட்டைகளைப் பெறுக

(அலுவலக செய்தியாளர்)

பாடசாலைகளூடாக விண்ணப்பித்தவர்களது தேசிய அடையாள அட்டைகளில் ஒரு தொகுதி யாழ்.செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

உரிய பாடசாலை அதிபர்கள் யாழ்.செயலகத்தின் ஆட்பதிவுத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளுமாறு ஆட்பதிவுத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சு)

# 2029 ஆம் ஆண்டில் நட்சத்திரமொன்று பூமியுடன் மோதும் ஆபத்து

செக்கன்கள் நிமிடமாகவும் நிமிடங்கள் மணித்தியாலமாகவும் மணித்தியாலங்கள் நாட்களாகவும் உருவாகி அடுத்த வருடத்தை எட்டிவிடுகின்றன. எனவே கண்மூடித் திறப்பதற்குள் வருடங்கள் ஓடி மறைகின்றன. அதன்படி 2029 ஆண்டும் விரைவில் வந்துவிடும்.

சரியாகக் கூறினால் 2029 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தினமாகும் அன்று உலகிலுள்ள இந்து பௌத்த மதத்தவர் அடுத்த நாள் தோன்றும் புதுவருடக் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஓடியாடித்திரிவர் ஆயினும் அன்று நடைபெறப் போகும் சுனாமி போன்றதொரு பேரனர்த்தத்தை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அன்றைய மகிழ்ச்சி கண்ணீா வெள்ளமாக மாறும் என்பதும் யாருக்கும் தெரியாது.



அன்றைய தினத்தில் வானத்தை நோக்கும் ஒருவருக்கு சந்திரனைவிடவும் பிரகாசமான பொருள் ஒன்று தென்படும். அதுவும் மற்றைய நட்சத்திரங்களைவிட பிரகாசமாகத் தோன்றும். அது 2004 MN4 எனப்படும் நட்சத்திரமாகும். அது எவ்வேளையிலும் புவியுடன் மோதலாம் என நாசாவிண்வெளி நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அவ்வாறு மோதும் 2004 MN4 நட்சத்திரம் சமுத்திரப் பகுதியில் விழுமாயின் மீண்டும் ஒரு பேரனர்த்தம் ஏற்பட வாய்ப்பிருப்பதாக மேற்படி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. அது புவி நடுக்கமாகவோ,வெள்ளப் பெருக்காகவோ, எரிமலையாகவோ இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


இந்த நட்சத்திரம் 320 மீற்றர் விட்டம் உடையது. எனினும் இது வளிமண்டலத்தைப் பாதிக்காமல் நேரடியாக புவியில் மோதக்கூடுமென ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதைப் போன்று ஒரு வான் பொருள் விழுந்ததாலேயே டைனோசர்கள் அழிவுற்றன என்றும் நம்பப்படுகின்றது.

மேற்படி நட்சத்திரம் புவியில் மோதும் என முன்னெச்சரிக்கை மட்டுமே விடுக்கப்படுகிறது. காரணம் இந்த நட்சத்திரமும் புவியும் அடுத்தடுத்த புவியொழுக்குப் பாதையில் பயணம் செய்வதால் சிலவேளை புவிக்கு அப்பாற் செல்லக் கூடிய வாய்ப்பும் தென்படுகின்றது எனக் கூறும் ஆய்வு. இது மணிக்கு 30 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் பயணிப்பதாகவும் கூறுகிறது. எனினும் சில வேளை இவை ஒன்றோடொன்று மோதும் அல்லது பயணிக்கும் வேகம் குறைந்து புவியில் விழுமென்றும் நம்பப்படுகிறது. இந்த நட்சத்திரம் புவியை அண்மிக்கும் போது ஆபிரிக்க, ஐரோப்பிய ஆசிய நாடுகளில் காணலாம். எனினும்வேறொரு ஆய்வறிக்கை இது 2035 ஆம் ஆண்டளவிலேயே புவியை மோதும்எனக் கூறுகின்றது. எனினும் நாசா நிறுவனம் இதனை மறுத்துள்ளது. மேலும் ஒரு ஆய்வுக்குழு இந்நட்சத்திரம் 2013 ஆம்,2021 ஆம் ஆண்டளவில் புவியை மோதும் எனத் தெரிவிக்கின்றது.

தற்போது இந்த நட்சத்திரம் ஒன்பது மில்லியன் மைல்களுக்கு அப்பால் இருப்பதாகக் கணிக்கப்படுவதால் வெறுங்கண்களுக்குப் புலப்படாது.

# இத்தாலியில் தோல் வங்கி அடுத்த மாதம் ஆரம்பமாகும்

உலகிலேயே முதன்முறையாகத் தோல் வங்கி ஒன்றை இத்தாலிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர் தீ விபத்தால் அதிகம் பாதிக்கப்படும் வாய்ப்பு உள்ள தீயணைப்பு வீரர்கள். இரும்புத் தொழிற்சாலை தொழிலாளர்கள் ஆகியோருக்கு உதவும் வகையில் இத்தகைய வங்கி அமைக்கப்படுகிறது. இங்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் தலை முடிக்குக் கீழிருந்து தோல் எடுக்கப்பட்டு பத்திரமாக பாது காக்கப்படும். மைனஸ் 180 டிகிரி. செல்சியஸ் வெப்பத்தில் திரவ நைட்ரஜனில் பாதுகாப்பாகவைக்கப்படும் இந்த தோல் அடுக்குகள், சம்பந்தப்பட்ட தொழிலாளி தீ விபத்தில் சிக்கும் போது பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்.



பொதுவாக தீக்காயம் அடைந்தவர்களுக்கு மீண்டும் ஆரோக்கியமான திசுக்களில் இருந்து தோல் உருவாகுவதற்கு 20 நாட்கள் பிடிக்கும். மிகவும் சிக்கலான இந்த 20 நாளில் நோயாளியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட நிறைய வாய்ப்பு உள்ளது. இடைப்பட்ட காலத்தில் களிம்புகள், மிருகங்கள் அல்லது வேறுமனிதர்களிடம் இருந்து பெறப்பட்ட தோல் அடுக்குகளைக் கொண்டு நிலைமையை சமாளிக்க முயற்சி நடக்கும். எனினும் சம்பந்தப்பட்ட நோயாளியின் சொந்தத் தோல் கலங்களை மீண்டும் பொருத்தினால் நல்ல பலன் கிடைக்கும். இந்த வங்கி வரும் ஜூலை முதல் செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# திரைப்படம் பார்க்க "ரெலி கிளாஸ்"


ஜப்பானின் நுணுக்குக்காட்டித் தயாரிப்பாளர்களான மியாகோ புயியோக்கா நிறுவனத்தினர் இப்புதிய ரகக் கண்ணாடியைத் தயாரித்துள்ளனர். 'ரெலிகிளாஸ்' என்றழைக்கப்படும் இக்கண்ணாடியில் இணைக்கப்பட்டுள்ள ஒரு மெல்லிய திரை மூலம் ஒரு முழு நீளப்படமொன்றைப் பார்க்கமுடியும். இது 50,000 ஜென் விலையுடன் விற்பனைக்கு வந்துள்ளது.




# உயரம், நிறை, அறிவை அதிகரிக்க இனிப்பு வடகொரியாவில் அறிமுகம்

வடகொரியாவில் உயரம், நிறை மற்றும் அறிவை வளர்க்கும் இனிப்பு வகை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. வழக்கமாக இந்த அம்சங்களை விருத்தி செய்ய கொடுக்கப்படும் மருந்துகளினால் பக்க விளைவுகள் ஏற்படும். ஆனால் இயற்கைப் பொருட்களில் இருந்து தயாரிக்கப்படும் இந்தப் புதிய வகை இனிப்புகளைச் சாப்பிட்டால் பக்க விளைவுகள் இல்லை என வடகொரியா உணவு ஆராய்ச்சி கழகம் அறிவித்துள்ளது. கடல்பாசி, பீன்ஸ்,கரட் மற்றும் சில இனிப்புவிதைகளைக் கொண்டு இந்த இனிப்பு தயாரிக்கபபடுகிறது. வழக்கமான சொக்லேட்டுக்களுக்குப் பதிலாக குழந்தைகளுக்கு இந்த இனிப்புத் தரவேண்டுமென வடகொரிய அரசு பணித்துள்ளது.

# உந்துருளி ஓட்டும் நாய்



சீனாவில் டல்மெட்டியன் இனத்தைச் சேர்ந்த நாய் உந்துருளி ஓட்டுவது சாதாரண நிகழ்வாகிறது.

இங்கு மூக்குக் கண்ணாடி அணிந்த அவ்வின நாய் ஒன்று உந்துருளி ஓட்டுவதையும், அருகில் அதனுடன் இணைந்த காரில் நாயின் உரிமையாளர் பயணிப்பதையும் காணலாம்.

இந்த நாய் மணிக்கு ஐந்து மைல் வேகத்தில் உந்துருளியைச் செலுத்தும்.

# இரண்டு தலையுடன் பிறந்த குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை

எகிப்து தலைநகர் கெய்ரோவில் கடந்த வருடம் மார்ச் மாதம் 30 ஆம் திகதி இரட்டைத் தலையுடன் ஒரு அபூர்வபெண்குழந்தை பிறந்தது. பொதுவாக இரட்டையராகப் பிறக்க வேண்டியவர்கள் கோளாறு காரணமாக ஒட்டிப் பிறப்பதுண்டு. சியாமிஸ் இரட்டை யர்கள் என இவர் களை அழைப் பார்கள். ஒரு சில சமயங்களில் இவர் களைப்



பிரிக்க முயற்சி செய்து வெற்றி பெறுவது முண்டு. எகிப்தில் பிறந்த குழந்தையைப் பொறுத்தமட்டில் இரண்டு பிறவிகளாக உருவாக வேண்டிய கரு போதிய வளர்ச்சி இல்லாமல் இரண்டு தலை, ஒரு உடலுடன் பிறந்தது. உலகில் இது வரை இது போல் பத்துக் குழந்தைகளே பிறந்துள்ளதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர். இதுவரை எந்தக் குழந்தையும் பிழைத்ததில்லை என்றும் கூறப்படுகிறது. இந்த நிலையில் இரட்டைத் தலையுடன் பிறந்த மனால் மேகட் என்ற பெண் குழந்தைக்கு பெங்கா நியோநேடல் மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு ஒரு தலை பிரித்து எடுக்கப்பட்டது. வைத்தியர் நசிப் ஹெப்னாவி தலைமை யில் மருத்துவர் குழு ஒன்று இந்த அறுவைச் சிகிச்சையை வெற்றி கரமாக நடத்தியுள்ளது. தற்போது மனா் நலமாக இருக்கிறாள். மத்திய கிழக்கு நாடுகளில் இது போன்ற அறுவைச் சிகிச்சை செய்யப்படுவது இதுவே முதன்முறை என்று கூறப்படுகிறது.

# பாரம்தூக்க உதவும் இலத்திரனியல் கருவி




ஜப்பான் நிறுவனம் ஒன்று பாரம் தூக்குவதை இலகுபடுத்தும் வகையில் கருவி யொன்றைத் தயாரித்துள்ளது. Ika-5" எனப் பெயர் பெறும் இக்கருவி இலத்திரனியல் சாதனமாகும். ஒருவர் இதனை முதுகில் இணைத்துக் கட்டுப்படுத்தும் கருவியினைப் பயன்படுத்தி இயக்கலாம். உள்ளங்கை, தொடை, பாதங்கள் என்பவற்றில் பாரத்தை சமநிலையில் வைத்திருக்கவும் கட்டுப்படுத்தவும் கருவி செயற்படும். பாரம் தூக்குவதற்கு மட்டுமன்றி கால் ஊனமுற்றோருக்கும் உலா வித் திரிவதற்கும் உதவி புரிகிறது.

# வழுக்கைக்கு காரணம்

ஜேர்மனியின் பான்பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் வழுக்கைக்கும், பாரம்பரியத்திற்கும் இடையிலான தொடர்பு பற்றி விரிவான ஆய்வு நடத்தினர். அப்போது ஆண்களுக்குத் தோன்றும் குறிப்பிட்ட வகை வழுக்கைக்கு (androgenetic alopecia) குறிப்பிட்ட மரபணு மாற்றமே காரணம் என்று தெரிய வந்தது. அதிலும் இந்த குறிப்பிட்ட மரபணு மாற்றம் பெண்களின் எக்ஸ் குரோசோமில் நடைபெறுகிறது எனத் தெரியவந்துள்ளது. ஆண்களுக்கு எக்ஸவைய் குரோசோம்களும், பெண்களுக்கு இரண்டு எக்ஸ் குரோசோம்களும் உண்டு. இந்த குரோசோம்கள் தான் மரபியல் பண்புகளைத் தீர்மானித்திருக்கிறது. கரு உருவாகும் போது ஆணிடமிருந்து ஒரு வகை குரோமோசோமும், பெண்ணிடம் இருந்து ஒரு எக்ஸ் குரோமோசோம் சேர்ந்தால் ஆண் குழந்தையாகும் பதிலுக்கு ஆணிடமிருந்து எக்ஸ் குரோமோசோமும், பெண்ணிட மிருந்து எக்ஸ் குரோமோசோமும் சேர்ந்தால பெண்குழந்தை உருவாகும். இந்நிலையில் வழுக்கைக்குக் காரணமான மரபியல மாற்றம் பெண்களுக்கு சொந்தமான எக்ஸ் குரோமோசோமில் நடைபெறுவதால், தந்தையுடன் ஒப்பிடும்போது தாய்வழி உறவில் தாத்தாமார்களுக்கு வழுக்கை இருந்தால், அந்தத் தாய்க்கும் பிறக்கும் குழந்தைக்கும் வழுக்கை வருவதற்கு கூடுதலான வாய்ப்பு உள்ளதாம்.

# நெற்பயிரின் தண்டைத்துளைத்து உட்புகுந்து இழையங்களை உட்கொள்ளும் அந்துக்குடம்பி

### நெற்பயிரைத்தாக்கும் பீடைகள்

1.மஞ்சள் சந்துகுத்தி (yellow Stem borer) நெற்செய்கையில் குறிப்பிடத்தக்களவு பொருளாதார சேதத்தை மஞ்சள் சந்துகுத்தி ஏற்படுத்துகின்றது.

### தாக்கத்தை அடையாளம் காணல்



01.இளம் நாற்றுப் பருவமாயின் இலைகள் சுருண்டு, மஞ்சளாகி நெற்பயிர் உலர்ந்து கருகிவிடுகின்றது.
02.கதிர் வருவதற்கு முந்திய இளம் பயிர்ப்பருவமாயின் கலனிழையங்கள் சிதைக்கப்பட்ட தண்டு கருகி/உலர்ந்து பயிர் இறக்கும். இது இறந்த இதயம் எனப்படும்.
03. கதிர்கள் வெளிப்படுகின்ற குடலைப்பருவத்தில் சேதம் ஏற்படுமாயின் "வெண்கதிர்" தோன்றும். இவற்றைக் கைகளினால் இழுக்கும் போது சுலபமாகக் கழன்றுவரும்.

### நிலையடலி (தாய்ப்பூச்சி)

குறுகிய வாழ்க்கைக்காலம் உடைய அந்துப்பூச்சிகள் ஆகும். 04-10 நாட்கள் மட்டும் உயிர் வாழக்கூடியவை. இவை தமது வாழ்க்கைக்காலத்தில் உணவு எதனையும் உட்கொள்வதில்லை. 16 மில்லி மீற்றர் நீளம் உடையவை பெண் அந்துப்பூச்சிகள் மஞ்சள் நிறமுடையவை இவை




தமது முதலாம் சிறகுச்சோடிகளின் மத்தியில் ஒவ்வொரு சிறகிலும் ஒரு கறுப்பு நிறப்புள்ளியைக் கொண்டிருக்கும். இவற்றின் சிறகுகள் விரிக்கப்படும் போது 25 mm-30mm தூரம் பரந்து வியாபிக்கும். சிறகு விளிம்புகளில் வெளிர் வெண்ணிற மயிர்கள் காணப்படும்.

ஆண் அந்துப்பூச்சிகள் கபில/மண்ணிறம் உடையவை. இவை பெண் அந்துகளிலும் சிறியவை. தமது இரண்டாம் சோடிச்சிறகுகளில் அதிக எண்ணிக்கையான மண்ணிறப்புள்ளிகளை இவை கொண்டிருக்கும்.

### முட்டை

நிறையடலி பெண் அந்துப்பூச்சிகள் நெற்பயிரின் இலைப்பரப்பின் மீது ஒரு தடவையில் 200 வரையான முட்டைகளைக் கூட்டமாக இடுகின்றன. இவ்விதம் இடப்படும் முட்டைகள் பெண் அந்தின் மண்ணிறமான குதப்பகுதிக்குரிய மயிர்களினால் மூடப்படுகின்றன. முட்டைகளிலிருந்து ஒரு வாரத்தினுள் (4-9 நாட்களினுள்) இளங்குடம்பிகள் வெளியேறுகின்றன.

### குடம்பி (புழுப்பருவம்)



முட்டைகளில் இருந்து வெளியேறும் குடம்பிகள் வெளிர்மஞ்சள் நிற உடல் உடையவை. இவற்றின் தலைப் பகுதி செம்மஞ்சள்நிறம் உடையது. இவை கால்களற்றவை. தண்டைத் துளைத்து உட்புகுந்து தண்டினுள் காணப்படுகின்றன. தண்டின் எப்பகுதியினுள்ளும் இவை காணப்படலாம். தண்டின் உள்ளிழையங்களை வெட்டி மென்று உட்கொள்வதுடன் விரைவாக தோல்கழற்றி வளர்ச்சியடைகின்றன. நன்கு வளர்ச்சியடைந்த குடம்பிகள் 25 மில்லிமீற்றர் நீளம் உடையவை. குடம்பிக்காலம்1-1/12 மாதங்கள் நீடிக்கின்றது.

### கூட்டுப்புழு

நன்கு வளர்ச்சியடைந்த குடம்பிகள் தண்டின் அடிப்பகுதியை நோக்கிச் சென்று தோல்கழற்றி தண்டின் அடிப்பகுதியினுள் கூட்டுப்புழுவாக மாறுகின்றன. இவை மென்மையானவை. வெளிர் நிறமுடையவை. கூட்டுப்புழு நிலை 7-11 நாட்கள் நீடிக்கின்றது. கூட்டுப்புழுக்கள் ஒரு தடவை தோல்கழற்றி நிறையடலிகளாக மாறுகின்றன. இவற்றின் வாழ்க்கை வட்டம் நிறைவடைய 08 வாரங்கள் தேவைப்படுகின்றன.

### கட்டுப்படுத்தல்

I. இரசாயனக் கட்டுப்பாட்டுமுறை

பின்வரும் தொகுதிப்பூச்சி நாசினிகளில் ஏதாவது ஒன்றை சிபார்சின் படி பாவிக்கவும்.

1.குளோர்பைறிபொஸ் 400 கி/லீ செ.கு
2.குளோர்பைறிபொஸ் 200 கி/லீ செ.கு
3.பென்தோயேற் 500 கி/லீ செ.கு
4.கார்போபியூறான் 3% குருணல்
5.டயசினோன் 5% குருணல்.

II இரசாயனமற்றமுறை

1.நெற்பயிரின் முட்டைக் கூட்டமுடைய இலைகளை வெட்டி எரித்து விடலாம்.

2.அறுவடையின் பின்னரும் அடுத்த தடவை பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க முன்னரும் வயலை ஆழமாக உழுதல்.

3.துப்புரவான பயிர்ச்செய்கையை மேற்கொள்வதன் மூலம்.

4.ஒரு ஏக்கருக்குப் பயன்படுத்த 15 கிலோ தவிடு மற்றும் 03-05 லீற்றர் மண்ணெண்ணெய் தேவை. இவை இரண்டையும் கலந்து அதிகாலையில் நெற்பயிரின் அடிப்பாகத்தில் படுமாறு தூவவேண்டும்.

5. விளக்குப் பொறிகளை வைத்துத் தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

நா.குகானந்தன்,
விவசாயப் போதனாசிரியர்,
ஒட்டுசுட்டான்.

# புதுக்குடியிருப்பில் எழுச்சியுடன் நடைபெற்ற தமிழீழ மாணவர் நாள் நிகழ்வுகள்

(புதுக்குடியிருப்பு)

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பில் ஊர்தி பவனி மற்றும் ஊர்வலத்துடன் மிகவும் எழுச்சியாக இடம்பெற்றது.



படப்பிடிப்பு தவரட்ணம்

ஊர்வலம் காலை சுமார் 10.30 மணியளவில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை முன்பாக இருந்து ஊர்வலம் ஆரம்பமானது. ஊர்வலத்தின் ஆரம்பத்தில் பொன் சிவகுமாரனின் உருவப்படத்தையும், மேஜர் முரளியின் உருவப்படத்தையும் தாங்கி மாணவர்கள் செல்ல தொடர்ந்து புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி மாணவிகளின் பாண்ட்வாத்தியம் செல்ல மாணவர்கள் அணிவகுத்து சிறிலங்காப் பேரினவாத அரசு மாணவர்கள் மீது புரியும் அராஜகச் செயல்களைக் கண்டித்து கோஷங்களையும்,சுலோக அட்டைகளையும் தாங்கிச் சென்றனர். இதனிடையே ஊர்தியும் பவனி வந்தது. தொடர்ந்து அதிபர்கள், ஆசிரியர்கள் சென்றனர்.

ஊர்வலம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி சென்றதும் அங்கு மாணவன் நிகால்டினின் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரைப் புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி அதி பர் பி.கே சிவலிங்கம் ஏற்றிவைக்க தேசியக்கொடியை முல்லை.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செல்வன் ஏற்றிவைக்க, பொன் சிவகுமாரன், மேஜர்முரளி ஆகிய இருவர்களது உருவப்படங்களுக்கு இரணைப்பாலை மகாவித்தியாலய அதிபர் இருதயநாதர் அவர்களும், புதுக்குடியிருப்பு றோமன்கத்தோலிக்க வித்தியாலய அதிபர் அன்ரன் குலதாஸ் அவர்களும் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன், புதுக்குடியிருப்பு சிறிமுருகானந்தா வித்தியாலய அதிபர் .செல்வநாயகம், இரணைப்பாலை மகாவித்தியாலய அதிபர் இருதயநாதர், மாணவன் நிகால்டின் ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து தமிழீழ மாணவர் ஒன்றியத்தால் விடுத்தஅறிக்கையை மாணவி சுரேந்தினி வாசித்தார். தொடர்ந்து முல்லை.மாவட்ட மாணவர் அமைப்பால் நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. (08)

# பேராதனை பூங்காவின் பின்புறம் நதிக்கரையில் சடலம் கண்டெடுப்பு

பேராதனைப் பூங்காவிற்கு பின்புறமாக உள்ள மகாவலி நதிக்கரையில் சில தினங்களுக்கு முன்னர் பேராதனைப் பொலிசாரினால் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கண்டெடுக்கப்பட்ட ஆண் ஒருவரின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இவரை அடையாளம் காண பேராதனைப் பொலிசார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளதாக பேராதனை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம்.எஸ். போவல தெரிவித்தார்.

இச்சடலம் சுமார் 40 வயதிற்கும், 50இற்கும் இடைப்பட்ட வயதுடைய ஒருவருடையதாக இருக்கலாமென பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இச்சடலம் கைகள் இரண்டும் பின்னால் கயிற்றினால் கட்டப்பட்டு கத்தியால் குத்தப்பட்டு காணப்படுகின்றது. இச்சடலம் கண்டி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர்கள் இராஜினாமா

சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சந்திம பண்டார, பிரதி உபவேந்தர் டபிள்யூ. எஸ்.பெணாண்டோ ஆகியோர் இராஜினாமாச் செய்துள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழக ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர்கள்இதனை அறிவித்துள்ளனர். பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டிருக்கும் இயல்பற்ற நிலைமைகளே தாம் இராஜினாமாச் செய்வதற்கு காரணமாக அமைந்ததாகச் சுட்டிக்காட்டியிருக்கும் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர் மற்றும் பிரதி உபவேந்தர், தமது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றங்களும் இல்லையெனவும் கூறியுள்ளனர்.

புதிய மாணவர்களைப்பகிடிவதைக்கு உட்படுத்துவதைப்போன்று அவர்களை தாம்சார் அரசியல் கட்சிகளுக்குச் சேர்த்துக்கொள்வதற்கு சிரேஷ்ட மாணவர்கள் முயற்சிப்பதாகவும்,இதனால் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டிருக்கும் இயல்பற்ற நிலைமை தொடர்பாகக் கலந்துரையாட வருமாறு சிரேஷ்ட மாணவர்களிடம் தாம் கேட்டுக்கொண்ட போதிலும், அவர்கள் அதற்கு ஒத்துழைக்கவில்லையென உபவேந்தர் பேராசிரியர் சந்திம பண்டார தெரிவித்துள்ளார். இதையடுத்தே தாம் தமது பதவியை இராஜினாமாச் செய்வதற்குத் தீர்மானித்ததாகவும் செய்தியாளர் மாநாட்டின்போது அவர் மேலும் தெரிவித்துள்ளார்

.இதேவேளை, சப்ரகமுவ பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. கடந்த வெசாக் தினத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளின்போது கிராம மக்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலைமைகள் காரணமாகத் தொடரும் மோதல் சம்பவங்களையடுத்தே பல்கலைக்கழகம் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த மோதல் சம்பவங்களின் போது 13பேர் காயமடைந்துள்ளதாகவும், இவர்களில் பத்துப்பேர் மாணவர்களெனவும் தெரிவிக்கப்படுகிறது. மோதல் சம்பவங்களுடன் தொடர்புடைய மாணவர்களை பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறுமாறு நிர்வாகம் தெரிவித்துள்ளபோதிலும், தமது பாதுகாப்புக்கருதி பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேற சம்பந்தப்பட்ட மாணவர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

# மாத்தளையில் பொலிசார் தேடுதல் அடையாள அட்டை இன்றி ஐவர் கைது

மாத்தளை மாவட்டத்தில் சிறிலங்கா பொலிசார் கடந்த புதன் சுற்றிவளைப்புத் தேடுதலில் ஐவரைக் கைது செய்துள்ளனர். இரவு 11 மணி முதல் அதிகாலை இரண்டு மணிவரை திடீர் சுற்றிவளைப்புஒன்றினை மேற்கொண்டனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி லெப்.கேணல் நிஸாம் முத்தலிப்பின் கொலை தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் குழுவினர் வழங்கிய தகவல்களை அடுத்து இத் தேடுதல் நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

இத்தேடுதல் நடவடிக்கையில் ஐந்துபேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட ஐவரிடமும் தேசிய அடையாள அட்டை இருக்கவில்லையென பொலிஸ் உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுவருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (31)

# DANISH REFUGEE COUNCIL (DRC)

DRC works at Promoting lasting solutions to the problems of refugees and internally displaced persons throughout the world.In Sri Lanka, DRC supports reinta tegration of returnd persons in the North and East and capacity building of local partner organizations DRC`s Head Office is located in Vavuniya, with district Offices in Trincomalee and Kilinochchi.

## Vacancies

### Office Administrator- Kilinochchi

The Office Administrator will assist the Head of Offioe in all matters relating to office administration, including reception work, secretareial tasks, book keeping, accounting Filing etc.

**Qualifications**

* Minimum GCE Advanced Level.
* Formal training in accounting. Preferably graduates in accountancy or mana geme nt.
* Experience in office administration.
* Good secretarial and inter personal skills.
* Computer skills in MS office, particularly spreadsheets.
* Good written and spoken English. Ability to communicate in Tamil required.

### Driver-Kilinochchi

The driver will be responsible for the transport of personnel and goods safely and for the maintenance of the vehicles in good condition.

* Valid driving license for private cars, vans and light trucks
* Fair knowledge of motor mechanism.
* Over 05 years driving experience.
* Pleasant personality.
* Ability to conversei n English and Tamil.
* willingness to travel out-of- station as and when required

Please forward your curriculum vitae along with names of two non- related referees to the following address withm 07 days of this advertisement. .

**Head- Financ & Administraton**
**Danish Refugee Council**
**No: 77, 1st Floor**
**1st Cross Street**
**Vavuniya**

**Fax No: 024-2224009**
**Email: drc-hfa@sltnet. lk.**

(சி-12029)

# DANISH REFUGEE COUNCIL (DRC)

DRC works at promoting lasting solutions to the problems of refugees and internally displaced persons throughout the world.In Sri Lanka. DRC supports reintegration of returned persons in the North and East and capacity building of local partner organisations. DRC's head office is located in Vavuniya. with district offices in Trincomalee and Kilinochchi

## VACANCIES

### Technical Officers:Kilinochchi / Mullaitivu

The Technical Officer will assist the District Manager in all aspects of reconstruction of infrastructure and development,implementation and documentation of the rehabilitation programme.

Technical Officers will work closely with local partners, relevant Government departments and other stakeholders, and promote a coordinated approach to rehabilitation.

**This position will be based in Kilinochchi..**

**Qualifications**

* Experience of rehabilitation/development work (especially monitoring of infrastructure projects) Would be an advantage
* Relevant technical qualification such as a National Certificate of T--nology (civil)from a recognized institutiuon
* Ability to identify emerging needs and problems in the district relevant to the rehabilitation programme
* Good liaison skills
* Experience of data collection, documentation and analysis
* Computer skills in MS office and data management
* Good report writing skills
* Ability to communicate in English

### Field Officer- Documentation Replacement Programme: Kilinochchi/ Mullaitivu

The conflict and tsunami have left many people without civil and land documents. Lack of documentation has a veriety of adverse consequences for those affected, such as restrictions on travel, problems realising educa tional and emploment opportunities, and diffculties buying and selling land. Field Officers will participate in an innovative programme that will seek to address this situation and assist conflict and tsunami affected people to realize their rights.

**This position will be based in Kilinochchi** (சி-12030)


(See to page 09)

# அமெரிக்காவில் தமிழர்புனர்வாழ்வுக் கழகம் தடை செய்யப்பட்ட அமைப்பு அல்ல

## -அமெரிக்கத் தூதரகம் தெரிவிப்பு

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட அமைப்பு இல்லையென அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதியாக இலங்கை வந்திருந்த அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதி கிளிங்டனை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப்பணிப்பாளர் றெஜி சந்தித்தது தொடர்பான சர்ச்சைகளுக்கு அமெரிக்கத் தூதரகம் விளக்கம் அளித்துள்ளது. இது குறித்து தூதரகம் வெளியிட்டுள்ள தகவல்களில் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் மைக்கேல் பெர்மியோ அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டெட்டை தொடர்புகொண்டு புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதி றெஜி கிளிங்டனைச் சந்திப்பது குறித்துக் கூறினார். கிளிங்டனுடனான இச்சந்திப்புக் குறித்து தங்களுக்கு எந்தச் சிக்கலும் இல்லையென்று அமெரிக்கத்தூதுவர் கூறினார்.

கடந்த திங்களன்று இது குறித்து கருத்துத் தெரிவித்த அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் பிலிப் ஏ ப்ரெய்ன், கிளிங்டன் அமெரிக்காவின் பிரதிநிதி அல்ல. அவர் ஐ.நாவின் பிரதிநிதியாகவே இங்கு வருகை தந்தார். இந்தப் பயணத்திற்கு நாங்கள் எதுவும் செய்ய இயலாது.

அரச சார்பற்ற அமைப்புக்களுடனான சந்திப்புக்குறித்து அமெரிக்கத் தூதரகம் எவ்வித யோசனைகளையும் அளிக்கவில்லை. பாதுகாப்பு மற்றும் ஊடகவியலாளர் மாநாடு குறித்தே ஐ.நா பிரதிநிதிகளிடம் நாங்கள் பேசினோம். கிளிங்டன் யார் யாருடன் சந்திப்பு மேற்கொள்கிறார் என்பதை எல்லாம் ஐ.நா அமைப்பினரே தீர்மானித்தனர்.

கிளிங்டன் ஒரு தனிநபராக ஐ.நாவுக்காக கடமையாற்றுகிறார். அவர் யாரை வேண்டுமானாலும் சந்திக்கலாம். அவர் அமெரிக்காவின் பிரதிநிதியாக இங்கு வரவில்லை என அத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலனாய்வு அதிகாரிகளைப் பாதுகாக்க முடியாவிடின் ஆட்சியை இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டும்

## -வடக்கு கிழக்கு சிங்கள அமைப்பு வலியுறுத்து

இராணுவப் புலனாய்வுத் துறை அதிகாரிகளை பாதுகாப்பதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தகுந்த நடவடிக்கையெடுக்க வேண்டுமென வடக்கு, கிழக்கு சிங்கள அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அரசாங்கத்தின் அமைச்சரவையும் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் கொலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென வடக்கு, கிழக்கு சிங்கள அமைப்பின் பொதுச் செயலாளர் சுனில் அளுத்கமகே தெரிவித்துள்ளார். இவ்வாறு நடவடிக்கையெடுக்கத் தவறினால் சனாதிபதி தலைமையிலான அரசாங்கம் ஆட்சியைவிட்டு வெளியேறிவிட்டு, இராணுவத்தினரிடம் ஆட்சியை கைளிக்கவேண்டுமென அவர் கூறியுள்ளார். தனது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத அரசாங்கத்தின் பங்காளிக்கட்சிகளுடன் சனாதிபதி பிரச்சினைப்பட்டுக்கொண்டிருப்பதாகவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க நாட்டு மக்களை சந்தோசமாக வைத்திருப்பதற்காக பகிடிகளைச் சொல்லிவருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (32)

## -முத்தலிப் கொலையை அடுத்து-

# சிறிலங்காவின் பாதுகாப்புச்சபை அவசரமாகக் கூடி ஆராய்வு

சிறிலங்கா பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாக கடந்த புதன்கிழமை கூடிய சிறிலங்காவின் தேசிய பாதுகாப்புசபை பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும், விரிவாக ஆராய்ந்துள்ளது. பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், மூத்த புலனாய்வு அதிகாரிகள், முக்கிய அமைச்சர்கள் மற்றும் மூத்த படைத் தளபதிகளும் கலந்து கொண்டனர். கொழும்பு நாரஹேன்பிட்டி பொல்ஹென்கொட பகுதியில் சிரேஷ்ட புலனாய்வுத்துறை அதிகாரியான மேஜர் முத்தலிப் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அவசர பணிப்புரைகளுக்கு அமையவே தேசிய பாதுகாப்பு சபையின் விசேடகூட்டம் பாதுகாப்புச் சபையில் இடம்பெற்றது.இந்த மாநாட்டில் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் அனைத்துச் சக்திகளையும், முறியடிப்பதற்கு புதிய பாதுகாப்பு வியூகங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு முக்கிய தீர்மானங்கள் நான்கு உட்பட பல தீர்மானங்கள் எட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.இங்கு எடுக்கப்பட்ட முடிவுகளை மிக ரகசியமாக வைத்திருக்கவும், தீர்மானிக்கப் பட்டுள்ளதுடன், கொழும்பு மாவட்டத்தின் பாதுகாப்பை முதலில் உறுதிப்படுத்தவும், அதற்குத் தேவையான பாதுகாப்பு தந்திரோபாயங்களை கையாள்வது தொடர்பாகவும், நீண்ட நேரம் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றிய அனைத்து விபரங்களும், புதன் பிற்பகல் மூன்று மணியளவில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரினால் சனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் இவை தொடர்பான சனாதிபதியின் ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன. (32)

## -லெப்.கேணல் முத்தலிப்பின்-

# பாதுகாப்பு அதிகாரிகளுக்கு விடுப்பு வழுங்கப்பட்டதென்பதற்கு மறுப்பு

லெப்.கேணல் துவான் நிசாம் முத்தலிப் படுகொலை செய்யப்பட்ட தினத்தன்று அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் யாவருக்கும் விடுமுறை வழங்கப்பட்டதெனும் குற்றச்சாட்டை இராணுவத்தரப்பினர் மறுத்துள்ளனர்.இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளையிடும் தளபதியான லெப்டினட் கேணல் முத்தலிப்பிற்கு ஒருபோதும் பாதுகாப்பு வழங்காமல் விடப்படவில்லையெனச் சுட்டிக்காட்டியுள்ள இராணுவ அதிகாரியொருவர்,இவருடைய பாதுகாப்புத் தொடர்பாக அண்மையில் இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட பரீட்சித்திருந்தாகவும் குறிப்பிட்டுள்ளார்.லெப்டினட் கேணல் துவான் நிசாம் முத்தலிப்புடைய பாதுகாப்பில் எவரும் தலையிட முடியாதெனவும்,எனினும், அன்றையதினம் அவருக்கு வழமையாக வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை அவர் பயன்படுத்தாமல் விட்டது துரதிர்ஷ்டமானது என்றும் அந்த இராணுவ அதிகாரி கூறியுள்ளார்.

# விஞ்ஞானிகளைப் பாட்டுப்பாட வைத்த இந்திய சனாதிபதி அப்துல்கலாம்



ஐஸ்லாந்து சென்றுள்ள இந்திய சனாதிபதி அப்துல்கலாம் அங்குள்ள விஞ்ஞானிகளைப் பாடவைத்து தனது இயல்பான சுபாவத்தை வெளிப்படுத்தினார்.

ஐஸ்லாந்து சென்றுள்ள அப்துல்கலாமுக்கு அந்நாட்டின் சனாதிபதி ஒலாபர் ரக்னர் கிரிம்சன் விருந்தளித்தார். அந்நாட்டின் முதல் மரக்கறி விருந்து இது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்நாட்டின் பல்வேறு துறையினரைச் சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

விஞ்ஞானிகளுடன் நடந்த ஆலோசனைக் கூட்டத்திலும் அப்துல்கலாம் கலந்து கொண்டார். நிலநடுக்க கணிப்புக் குறித்து நீண்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. மிகவும் கடுமை யான விடயத்தில் அவர்கள் விவாதம் இருந்ததால் அவர்களது மனநிலையை மாற்றும் வகையில் "யாராவது பாடுங்கள்" என்று கலாம் கூறினார்.

வெளியுறவுத்துறை மூத்த அதிகாரி ஒருவர் முன்வந்து ரவீந்திரநாத் தாகூரின் 'ஏகலா சலோரே' என்ற கவிதையைப் பாடினார். பின்னர் செயலர் சசி திரிபாதி ஒரு பாடல் பாடினார்.

ஐஸ்லாந்து தரப்பு விஞ்ஞானிகள் நாட்டுப்புற பாடல்களைப்பாடினர். இந்திய அதிகாரிகள் சிலர் இந்தியப் பாடல்கள் பாடி பாராட்டுப் பெற்றனர். இரண்டு சனாதிபதிகளும் பாடகர்களைப் பாராட்டி ஊக்குவித்தனர்.


# பதவி வெற்றிடம்

## வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி அஸ்சூரன்ஸ்

HNB ASSURANCE
For a brighter future

பதவி:- காப்புறுதி ஆலோசகர் (Insurance Advisor)

தகைமைகள்:-

01) க.பொ.த. (சா/த) தமிழ்/ஆங்கில பாடத்துடன் கணித பாடம் அடங்கலாக ஆறுபாடங்களில் சித்தி.

02) காப்புறுதி தொடர்பான அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை

03) பட்டதாரிகளுக்கு ம்/பல்கலைக்கழக உயர் கல்வி பயிலுபவர்களுக்கும் முன்னுரிமை

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. உங்கள் விண்ணப்பங்களை 12.06.2005இற்கு முன் ப,ரண சுயவிபரக் கோவையுடன் இணைத்து கீழ்க்காணும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பவும். விண்ணப்பிக்கும் போது கடித இடப்பக்க மேல்உறையில் பதவி தொடர்பான விபரத்தைக் குறிப்பிடவும்.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி

Manager.
HNB Assurance
Regional Development center
212-214 Hospital Road
Jaffna
Tel/fax 021-2226016.

(சி.12032)

**Field Officer: Vavuniya/Mannar**

The field Officer will assist the Team Leader/District Manager in all aspects of DRC `s rehabilitation programme. The Field officers will have particular responsibility for activities such as training and awareness-raising on rights. Field officers will work closely with local partners, relevant Govemment departments and other stakeholders.

**This position will be based in vavuniya**

**Qualifications for both positions:**

- University Degree (ideally law,politics or social studies) and 1years relevant experience or A levels and 2 years relevant experience
- Knowledge fo government structures
- Confidence and ability to liaise at all levels
- Flexibility, enthusiasm and a creative approach
- Advocacy skills
- Training skills
- Good repoct writing skills
- Computer skills in MS office and data mana gemetnt skills
- Ability to communicate in English

Please forward your curriculam vitae inciuding contact telephone No and names of two unrelated referees to the following address within 07 days of this advertisement

Position applied for should be in dicated on the top left hand side of the envelope

**Head- Finance & Administration**
**Danish Refugee Council**
**No: 77, 1st Floor**
**1st Cross Street,**
**Vavuniya.**
**Fax No: 024-2224009**
**E mail: drc-hfa@ sltnet. lk.**

(சி- 12029)


# போபர்ஸ் பீரங்கி ஊழல் வழக்கில் மன்னிப்புக் கேட்கும் பேச்சுக்கே இடமில்லை

*வி. பி. சிங்*

போபர்ஸ் வழக்கில் மன்னிப்புக் கேட்கும் பேச்சுக்கே இடமில்லை என்று வி.பி.சிங் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

போபர்ஸ் பீரங்கி ஊழல் வழக்கில் ராஜீவ் காந்தி பெயரை தேவையின்றி இழுத்ததற்காக முன்னாள் பிரதமர் வி.பி.சிங் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி வற்புறுத்தி வருகிறது. இதற்கு வி.பி.சிங் நேற்று முன்தினம் பதிலளித்து நிருபர்களிடம் பேசியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

போபர்ஸ் பீரங்கி பேரஊழல் வழக்கில் நான் மன்னிப்புக் கேட்கும் பேச்சுக்கே இடமில்லை. அந்த வழக்கில் ராஜீவ்காந்தி பெயரை நான் இழுக்கவில்லை. தனிப்பட்ட முறையில் அவர் மீது நான் குற்றச்சாட்டுக் கூறவில்லை. நான் பிரதமராக இருந்த போதே எனது அரசு தொடுத்த முதல் தகவல் அறிக்கையிலும் ராஜீவ்காந்தியின் பெயர் இடம்பெறவில்லை. நான் என்ன கூறினேனோ அவை எல்லாம் சரியான தகவல்கள் என்பது வங்கிக் கணக்குகள் மூலம் நிருபணமாகியுள்ளது. இப்படியிருக்கும் போது நான் எதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்? போபர்ஸ் பீரங்கி பேர ஊழலில் ராஜீவ்காந்தி பணத்தை எடுத்துக்கொண்டார் என்று நான் கூறவில்லை.

பாரதிய ஜனதா அரசுதான் ராஜீவ்காந்தி இறந்த பின்பு இந்திய பாரம்பரியத்திற்கு எதிரான விதத்தில் அவரது பெயரைப் போபர்ஸ் வழக்கில் சேர்த்தது. எனவே ராஜீவ்காந்தி மீது தனிப்பட்ட முறையில் யார் குற்றம் சாட்டினார்களோ அவர்கள் தான் மன்னிப்புக் கேட்க வேண்டும். இந்த வழக்கில் நீதிமன்ற மரபுப்படி ஆதாரங்களுக்கான சான்றிதழ்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க சி.பி.ஐ தவறிவிட்டது. பொதுவாக ஜெயின் ஹவாலா டைரி வழக்கிலும் சரி, சந்திராசாமி வழக்கானாலும் சரி சி.பி.ஐ. எப்போதும் ஆதாரங்களை ஒப்படைக்கத் தவறிவிடுகிறது. அதன் மர்மம் என்ன என்பது தெரியவில்லை. போபர்ஸ் வழக்கிலும் இப்படித்தான் நடந்துள்ளது. எனவே பாராளுமன்ற கூட்டுக்குழு அமைத்து இதுபற்றி விசாரிக்க வேண்டும். பெரிய இடங்களில் நடக்கும் ஊழல்களைப் பற்றி விசாரிக்க லோகாயுக்தாவை விரைவில் அறிமுகப்படுத்த வேண்டுமென அவர் கூறினார்.

# இந்தியாவை எந்த நாடும் ஆட்டிப்படைக்க முடியாது

*அப்துல்கலாம்*

இந்தியாவை எந்த நாடும் ஆட்டிப் படைக்க முடியாதென இந்திய சனாதிபதி அப்துல்கலாம் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா, சுவிற்சர்லாந்து, ஐஸ்லாந்து ஆகிய நாடுகளில் பயணத்தை முடித்துக் கொண்டு சனாதிபதி அப்துல்கலாம் உக்ரைன் நாட்டுக்குச் சென்றார்.

அந்த நாட்டில் குடியேறிய இந்தியர்கள் மத்தியில் அவர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;1998 ஆம் ஆண்டு இந்திய பொக்ரானில் அணுகுண்டு சோதனை நடத்தியது. அதைத் தொடர்ந்து பணக்கார நாடுகள் இந்தியா மீது பொருளாதாரத்தடை விதித்தது. அதனால் யாரும் கலங்கிவிடவில்லை. இந்திய விவசாயிகள் முதல் வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் வரை கிளர்ந்து எழுந்தனர். பொருளாதாரத் தடையை சவாலாக ஏற்றுச் சமாளித்தனர். இந்தியாவை எந்த நாடும் ஆட்டிப் படைக்க முடியாது என்று உலகுக்கு எடுத்துக் காட்டினர். இந்தியா பொருளா தார துறை உட்பட அனைத்துத் துறையிலும் தன்னிறைவு பெறவேண்டும். சொந்தக்காலில் நிற்க வேண்டுமென்று இந்தியர்கள் அனைவரும் உறுதி மொழி ஏற்க வேண்டும்.

அதற்கான ஆதாரம் நம்மிடம் உள்ளது. நமது வளத்தை நெறிப்படுத்து வதன் மூலம் 2020 ஆம் ஆண்டு இந்தியா வளர்ந்த நாடு என்ற கனவுநனவாகும்.

இந்திய அரசியலில் கொலையாளிகள் ஆதிக்கம் பற்றி பொதுமக்கள் கேட்கின்றார்கள். நல்லவர்கள்,நல்லவரையே தேர்ந்து எடுப்பார்கள். நல்லவர்களைத் தேர்ந்தெடுப்பது மக்கள் பொறுப்பபென அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜெயேந்திரர்-விஜயேந்திரர் மடம் திரும்புவர்

(காஞ்சிபுரம்)

வரதராஜப் பெருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாக நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட ஜெயேந்திரர், விஜயேந்திரர்ஆகிய இருவரும் சிலவாரங்களில் சங்கரமடம் திரும்பவுள்ளனர்.

வரதராஜப் பெருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாக சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டார். சுமார் இரண்டு மாதங்கள் சிறையில் இருந்த அவர் சனவரி பத்தாம் திகதி பிணையில் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும்வரை ஜெயேந்திரர் சங்கர மடத்துக்குள் செல் லக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து ஜெயேந்திரர் கலவையில் உள்ள சங்கரமடக்கிளையில் தங்கினார். அங்கு தினமும் பூஜை, வழிபாடுகளை நடத்தி வருகிறார்.

இதேபோல் இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட விஜயேந்திரர் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி சென்னையில் தங்கியிருந்தார். நிபந்தனை தளர்த்தப்பட்டதும் அவரும் கலவை சென்று ஜெயேந்திரருடன் தங்கினார்.

தற்போது ஜெயேந்திரரும், விஜயேந்திரரும் காஞ்சிபுரம் சங்கர மடத்துக்கு திரும்ப முடிவு செய்துள்ளார்கள்.




புதுவையில் தென்மாநில முதலமைச்சர்கள் மாநாடு மத்திய அமைச்சர் சிவராஜ்பட்டேல் தலைமையில் நடந்தபோது எடுத்தபடம்

- 2ஆவது டெஸ்ட் போட்டி -

## ஹார்மிசன் அபார பந்துவீச்சு; பங்களாதேஷ் அணி சுருண்டது





இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி அந்நாட்டு அணிக்கு எதிரான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியிலும் பரிதாபமான நிலையை அமைந்துள்ளது.

நேற்று ஆரம்பமான மேற்படி போட்டியில் முதலில் ஆடிய பங்களாதேஷ் 39.5 ஓவரில் 104 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் ஓமர் 37,மரட்சயா 22 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர். பந்துவீச்சில் ஹார்மிசன் ஐந்து விக்கெட்டுக்களையும் ஹொக்ஹாட் மூன்று விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். பதிலுக்கு ஆடும் இங்கிலாந்து நேற்றைய தேனீர் இடைவேளையின் போது ஒரு விக்கெட்டையிழந்து 46 ஓட்டங்களை பெற்றிருந்தது. இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்

## ஐ.சி.சி துடுப்பாட்ட தரவரிசையில் பிறைன் லாரா முதலாம்இடத்தில்



ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசை பட்டியலில் பிறைன் லாறா மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) வீரர்களுக்கான டெஸ்ட் தரவரிசை பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. பாகிஸ்தானுக்கு எதிரான பிரிட்ஜ்டவுன் டெஸ்டில் சதம் அடித்த மேற்கிந்தியத்தீவின் லாறா மீண்டும் முதலிடம் பெற்றுள்ளார்.

தென் ஆபிரிக்காவின் ஜாக்ஸ் கலிஸ் இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். ராகுல் ராவிட் மூன்றாவது இடத்தில் இருக்கிறார்.

மேற்கிந்திய தீவு அணித் தலைவர் சந்தர்போல் எட்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். தரவரிசை பட்டியலில் இவர் முதல் முறையாக 800 புள்ளிகள் பெற்றுள்ளார். பந்துவீச்சில் அவுஸ்திரேலியாவின் கிளென் மெக்ராத் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறார் இரண்டாவது இடத்தில் இலங்கையின் முத்தையா முரளிதரன் உள்ளார். கும்ளே ஏழாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

## பங்களாதேஷ் தனது நிலையில் முன்னேற்றம் காணும் வரை டெஸ்ட் அந்தஸ்த்தை இடை நிறுத்த வேண்டும்-மியன்டாட்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி தனது நிலையில் முன்னேற்றம் காணும் வரை அதற்கு வழங்கப்பட்டுள்ள டெஸ்ட் அந்தஸ்த்து இடைநிறுத்தப்பட்ட வேண்டுமென முன்னாள் பாகிஸ்தான் வீரர் ஜாவிட் மியண்டாட் தெரிவித் துள்ளார்.


பங்களாதேஷுக்கு வழங்கப்பட்டுள்ள டெஸ்ட் அந்தஸ்த்தை மறு பரிசீலனை செய் வதற்குப் பதிலாக அவர்களின் தரம் உயர்வதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை உதவி புரிய வேண்டும் என்று கூறிய அவர் பல பகிஷ் கரிப்புக்களை மேற்கொண்ட சிம்பாப்வே அணி பலமற்றுக்காணப்படும் நிலையில் அதன் டெஸ்ட் அந்தஸ்த்து அங்கீ கரிக்கப்படுமிடத்து ஏன் பங்களாதேஷ் அணியை அங்கீகரிக்க முடியாது என வினாவெழுப்பியுள்ளதுடன் தாம் இது தொடர்பில் ஐ.சி.சி.யுடன் கலந்தாலோசிக்க விருப்பதாகவும் தெரிவித்தார்.

## முதுகுவலியால் அத்தப்பத்து அவதி போட்டிகளில் பங்கேற்பது சந்தேகம்

சிறிலங்கா கிரிக்கெட் அணி வரும் ஜூலை 15ஆம் திகதி முதல் மேற்கிந்தியத் தீவுகளுடான டெஸ்ட் போட்டி ஆரம்பமாகவுள்ள நிலையில் அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து முதுகுவலியால் அவதிப் படுவதாகவும், அதற்காக அவர் அவுஸ்திரேலியாவுக்கு சிகிச்சைக்கு செல்லவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டநாட்களாகவே அவருக்கு முதுகுவலி இருந்து வருவதாகவும், அது தற்போது கடுமை நிலைக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கும் கிரிக்கெட் சபை நிறைவேற்றதிகாரி றஞ்சன் மடுகல்லஅடுத்த வருடம் அணி பங்கு கொள்ளும்15 டெஸ்ட் மற்றும் 42 ஒரு நாள் போட்டிகளிலும் அவர் பங்கேற்பது கடினமானதாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

பொதுவாக ஒருவருடத்தில் 25ஒருநாள் போட்டியிலும் 10டெஸ்ட போட்டியிலுமே தனது அணிபங்கேற்கும். ஆனால் அடுத்த வருடம் இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, பங்களாதேஷ் நாடுகளுடன் ஆட்டங்களில் பங்குபற்ற வேண்டியுள்ளதாக அவர் தெரிவித் துள்ளார்.



## பிரெஞ் ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டிக்கு ஹெனின்



பிரெஞ் ஓபன் இறுதிப் போட்டிக்கு முன்னாள் முதல் நிலை வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் முன்னேறியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரெஞ் ஓபன் டென்னிஸ் தொடர் பாரிசில் நடக்கிறது. பெண்கள் ஒற்றையர் அரை யிறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந் தது. இதில் பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் ரஷ்யாவின் நாதியா பெட்ரோ வாவை எதிர்த்து விளையாடினார். தரமான நிலையிலுள்ள ஹெனின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவரது வேகத்திற்குஈடு கொடுக்க முடியாத பெட்ரோவா முதல் செட்டில் எளிதில் தோல்வி அடைந்தார். இரண்டாவது செட்டிலும் இவரால் நெருக்கடி அளிக்க முடியவில்லை இறுதியில் ஹெனின் 6-2, 6-3 என்றநேர் செட்களில் வெற்றி பெற்று இறுதிப் போட்டி க்கு முன்னேறினார்.




ஜமேக்காவில் உள்ள கிங்ஸ்டனில் நடந்த விழாவில் "2004" சிறந்த ஒரு நாள் கிரிக்கெட் வீரர்கள் விருதை மேற்கிந்தியத் தீவு வீரர் கிறிஸ் கெய்ல்சும் சிறந்த வீரர் விருதை பிரயன் லாராவும் பெற்றனர்.

## ஆஷஸ் கிரிக்கெட் சுற்றுப் போட்டி அவுஸ்திரேலிய அணி அறிவிப்பு

அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் இடையேயான ஆஷஸ் தொடர்போட்டிக்கான அவுஸ்திரேலிய அணி அறிவிக் கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் இடையே ஆண்டுதோறும் ஐந்து டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட ஆஷஸ் கிரிக்கெட் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட்போட்டி லோட்ஸ்சில் ஜூலை 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடக்கிறது. இரண்டாவது டெஸ்ட்போட்டி எட்ஜ்பஸ்டனில் ஓகஸ்ட் நான்காம் திகதி முதல் எட்டாம் திகதி வரை நடக்கிறது.

மூன்றாவது டெஸ்ட் போட்டி ஓல்ட் டிராப் போர்ட்டில் ஓகஸ்ட் 11ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையும் நான்காவது டெஸ்ட்போட்டி டிரொண்ட் பிரிட்ஜில் ஆகஸ்ட் 25 ஆம் திகதி முதல் 29- ஆம் திகதி வரையும்,ஐந்தாவது டெஸ்ட் போட்டி ஓவலில் செப்டம்பர் எட்டாம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளது.

## மாணவர் எழுச்சி நாளையொட்டி விளையாட்டுப் போட்டி முடிவுகள்

தமிழீழ மாணவர் எழுச்சிநாளையொட்டி வவுனியா மாவட்ட மாணவர் அமைப்பு வவுனியா வடக்கு வலய பாடசாலைகளுக்கு இடையே நடாத்திய விளையாட்டுப்போட்டி ஓமந்தைக் கோட்டக்கல்வி அதிகாரி சிறீதரன் தலைமையில் புதுக்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

மென்பந்து:-நெடுங்கேணிக்கோட்டம் முதலாமிடம் புளியங்குளம் இந்துக்கல்லூரி, இரண்டாமிடம் நெடுங்கேணி மகாவித்தியாலயம். ஓமந்தைக் கோட்டம் முதலாமிடம் புதுக்குளம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் கல்மடு படிவம்I அ.த.க பாடசாலை.

வலைப்பந்து:- நெடுங்கேணிக்கோட்டம் முதலாமிடம் குளவிசுட்டான் அ.த.க பாடசாலை, இரண்டாமிடம் நெடுங்கேணி மகாவித்தியாலயம். ஓமந்தைக் கோட்டம்: முதலாமிடம் புதுக்குளம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் தாணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்.

மேலைத்தேய வாத்தியம்; ஓமந்தைக்: கோட்டம் முதலாமிடம் புதுக்குளம் மகாவித்தியாலயம். இரண்டாமிடம் கல்மடு படிவம் -I அ.த.க பாடசாலை.

அணிநடை: ஓமந்தைக்கோட்டம் ஆண்கள் முதலாமிடம் புதுக்குளம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம், கல்மடு பாடசாலை. பெண்கள் முதலாமிடம் புதுக்குளம் மகாவித தியாலயம், இரண்டாமிடம் கலமடு அ.த.க பாடசாலை.

(10)






பிரிட்டனில் உள்ள கார்டிப் நகரில் நடந்த இங்கிலீஷ் லீக் சாம்பயன்ஷிப் கால்பந்து போட்டியில், வெஸ்ட் ஹாம் யுனைடெட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் பரஸ் டன் அணியை வீழ்த்தியது. தனது அணியின் வெற்றிக் கோலை அடிக்கிறார் வெஸ்ட் ஹாம் வீரர் பாப ஜமோரா.



முதலாமிடத்தில் வெற்றி பெற்ற பண்டாரவன்னியன் கழகத் தலைவரிடம் ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி சுபாசினி கந்தையா வெற்றிக்கேடயம் வழங்குவதை படத்தில் காணலாம்.




5000 மீற்றர் ஓட்டத்தில் வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு ஒட்டுசுட்டான் உதவிஅரச அதிபர் சான்றிதழ் வழங்குகின்றார். (05)

## கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டி

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட கழகங்களுக்கிடையேயான இறுதி விளையாட்டு போட்டி 31.05.05 அன்றுநடைபெற்றது.

இதில் இறுதியாக ஐந்து கழகங்கள் பங்குபற்றின. முதலாம் இடத்தை 209 புள்ளி பெற்று பண்டாரவன்னியன் கழகமும், 130 புள்ளிகள் பெற்று ஈஸ்வரன் கழகம் இரண்டாம் இடத்தையும், 67 புள்ளிகளைப் பெற்று பரந்தாமன் கழகம் மூன்றாம் இடத்தையும் பெறறுக்கொண்டன. (05)

## சிந்தனைக்கு



எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 04-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## பழைய பாணியே தொடர்கிறது

திருகோணமலை நகரில் கடந்த 15 ஆம் திகதி திடீரென முளைத்த புத்தர் சிலையால் ஏற்பட்ட நெருக்கடி தீர்வதற்கான சமிக்ஞைகளை விட அது மேலும் வலுவடைவதற்கான சம்பவங்களே அதிகரித்து வருகின்றன. சிறிலங்கா அரசுத்தலைவரோ அவரது அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்களோ இது தொடர்பான நடவடிக்கைகளை விரைவாக எடுத்து நிலைமையைச் சீர் செய்வதற்குப்பதிலாக இழுத்தடிப்புச் செய்து மேலும் மோசமடையச் செய்வதற்கான செயற்பாடுகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சிலை நிறுவப்பட்ட உடனேயே பொலிசார் நடவடிக்கை எடுத்திருந்தால் சிலை நிறுவப்பட்ட ஒரு சில நிமிடங்களிலேயே பிரச்சினை முடிவுக்கு வந்திருக்கும். ஏனெனில் இதற்குப் பின்னர் திருகோணமலை உப்புவெளியில் நிறுவப்பட்ட புத்தர்சிலையொன்றைப் பொலிசார் உடனடியாகவே அகற்றிவிட்டனர் அத்துடன் அவ்விவகாரம் முடிவுக்கு வந்தது.

ஆனால் திருமலைநகரில் அமைக்கப்பட்ட புத்தர்சிலையை பொலிசார் உடனடியாக அகற்ற முன் வரவில்லை, பின்னர் நீதிமன்றம் அகற்றுமாறு உத்தரவிட்ட போதும் அது அகற்றப் படவில்லை.

உண்மையிலேயே இங்கு இச்சிலை வழிபாட்டு நோக்கத்துக்காக அமைக்கப்படவில்லை, இப்பகுதியில் சிறிய சிலையொன்றை வைத்து ஓட்டோசாரதிகள் வழிபட்டு வந்தபோது அதனை எவரும் எதிர்க்கவில்லை. ஆனால் ஆக்கிரமிப்பு நோக்கத்தோடு இச்சிலை பெரிதாக அமைக்கப்பட்டபோதே பிரச்சினை உருவாகியது.

எனவே அதனை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்ட போதாவது பொலிசார் அதனைச் செய்திருப்பார்களானால் பிரச்சினை அவ்வளவுடனாவது முடிவுக்கு வந்திருக்கும்.

பொலிசார் அதனை அகற்ற நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல அதனைப் பாதுகாக்கவெனக் கூறிக்கொண்டு அப்பாவித் தமிழ் மக்களைத் தாக்கிய குண்டர்களுக்கு பாதுகாப்பும் வழங்கினர். பின்னர் படிப்படியாகப் படையினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டதுடன், புத்தர் சிலையைச் சுற்றி மண் அரண்களும், முட்கம்பி வேலிகளும் அமைக்கப்பட்டு இப்பொழுது அது இராணுவ முகாம் ஒன்றைப் போலவே காட்சிதருகிறது.

.இவ்வாறுதான் தமிழ்மக்களின் பூர்வீக நிலங்கள் பல பறிபோயின, இதனால்தான் பௌத்த மதத்தை தமிழ் மக்கள் வெறுக்காவிட்டாலும் புத்தர்சிலையை ஆபத்தின் சின்னமாகப் பார்க்கவேண்டியுள்ளது.

இப்போது புத்தர்சிலை வைக்கப்பட்டபகுதிகளில் மட்டுமல்ல திருகோணமலை நகரிலும் நகர்சார்ந்த பகுதிகளிலும் பெருமளவு இராணுவத்தினர். பாதுகாப்பு என்ற அடிப்படையில் குவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் சிலைவைப்புக்குப்பின் தமிழ் மக்கள் நடத்திய தொடர் ஹர்த்தால் போராட்டத்தால் அரசாங்கம் இதனைச் சமரசம் செய்யவிரும்புவது போல முன் வந்தது.

முதலில் பாதுகாப்பு அமைச்சின்செயலாளர் கால அவகாசம் கோரினார். கடந்த இரண்டாம் திகதி வரை வழங்கப்பட்டது பின்னர் அமைச்சர்மட்ட உயர்குழு சனாதிபதி சந்திரிகா அம்மையார் சார்பில் கால அவகாசம் கோரினர். எதிர்வரும் 15ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டது.

ஆனால் புத்தர் சிலை விவகாரத்தின் பின் பெருமளவில் அங்கு குவிக்கப்பட்ட படையினரை வெளியேற்றவேண்டும் என தமிழ் மக்கள்சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்றுவதாகக் கூறிய சிறிலங்கா அமைச்சர் பின்னர் அதனைக் கைவிட்டார்.

இதன் காரணமாக நேற்று தமிழர் தாயகப் பகுதியெங்கும் பூரணஹர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. இதனை ஓர் அடையாளப் போராட்டமாகவே தமிழ்மக்கள் நடத்தியுள்ளனர்.

இதேவேளை சிங்கள இனவாதிகள் இவ்விவகாரத்தை ஊதிப்பெருப்பித்து இன்று பல்வேறு சவால்களையும் விடுத்துக் கொண்டிருக்கின்றனர் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரச்சினைக்கு நடவடிக்கை எடுப்பார் எனக் கூறி பெற்றிருக்கும் கால அவகாசமும், பொலிசார் நடவடிக்கை எடுக்காது தாமதித்த காலமும் சிங்கள இனவாதிகளின் இத்தகைய குரல்கள் ஓங்கவே வழிவகுக்கும்/ வழிவகுத்திருக்கிறது. சிங்கள ஆட்சியாளர்கள் கடந்த காலங்களிலும் கூட இவ்வாறான நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டுவந்துள்ளனர். அதாவது பிரச்சினைகளை இழுத்தடித்து இனவாதிகள் கூக்குரலிட கால அவகாசம் வழங்கி பின்னர் அவர்களின் தலையில் பழிபோட்டுவிட்டு, பிரச்சினைகளைத் தீர்க்காது விடுவதே அவர்களின் பாணியாகும்.

# இனவெறி,கொலை அச்சுறுத்தலுக்கெதிராக பொதுஅமைப்புக்கள் மாநாட்டில் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பில் இனவெறிக்கும், கொலை அச்சுறுத்தல்களுக்கும் எதிரான மாநாடு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. ஊடகவியலாளர், தொழிற்சங்கங்கள், மக்கள் நல அமைப்புக்கள், கலைஞர்கள் என 60 இற்கும் மேற்பட்ட அமைப்புக்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் இம் மாநாட்டில் பங்கேற்றனர். கொழும்பு நகரசபை கட்டடத்தில் உள்ள ஜெயவர்த்தன நிலையத்தில் இம்மாநாடு நடந்தது. மாநாட்டின் தொடக்கத்தில் மறைந்த மாமனிதர் சிவராம் உள்ளிட்ட ஊடகவியலாளர்களுக்கு ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியோர் அனைவரும், இனவெறியையும் கொலை அச்சுறுத்தல்களையும் வன்மையாகக் கண்டித்து உரையாற்றினர். இன ஒற்றுமையை வலியுறுத்தும் கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் தலைவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்தியது.

திரைப்பட இயக்குநர் தர்மசிறி பண்டாரநாயக்க பேசுகையில், வடக்கு கிழக்கு மக்களுடன் தான் கலாசார உறவை உருவாக்கியதனை அடுத்து கொலை அச்சுறுத்தல் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளார். சிறிலங்கா மகாஜன கட்சியின் பெண்கள் பிரிவின் தலைவர் துளசி சில்வா பேசுகையில், இலங்கைச்சமூகம் இத்தகைய படுகொலை நடவடிக்கைகளால் தொடர்ந்து பாதிக்கத் தயாராக இருக்கிறதா? இத்தகைய நிகழ்வுகளுக்கு எதிராக அனைவரும் ஒன்றாக அணிதிரளப் போகிறோமா? இல்லை இந்தக் கூட்டத்திற்குப் பின் அப்படியே கலைந்து போகப்போகிறோமா? என்று கேள்வி எழுப்பினார்.

இந்த நிலையில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் படுகொலை மற்றும் அச்சுறுத்தல்களுக்கு எதிரான சர்வதேச அமைப்பு தன் குழுவினரை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்றும் இம்மாநடு கோரிக்கை விடுத்தது. .

# கூட்டணி அரசிலுள்ள ஒன்பது கட்சிகளுக்கும் பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கம் தெரியாது

### -தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஒன்பது கட்சிகளைக் கொண்டது. இருந்த போதும் அதில் ஒன்றுக்கு கூட பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கம் என்னவென்பது தெரியாது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குணவன்ஸதேரர் தெரிவித்தார். ஊடகமொன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் இந்த அரசில் தேசப்பற்றாளர்கள் இருக்கிறார்கள். நாம் எத்தனையோ அரசுகளை மாற்றியிருக்கிறோம். கவிழ்த்திருக்கிறோம் பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திட்டால் சந்திரிகா அரசிற்கும் அந்த நிலைமை தவிர்க்க முடியாதது.

முன்னரெல்லாம் ஆட்சியை மாற்றுவதென்பது தாதிகளை வைத்து நாம் மேற்கொண்ட சத்திரசிகிச்சை. ஆனால் இப்போது மேற்கொள்ளப் போவது வைத்திய நிபுணர்களை கொண்ட சத்திரசிகிச்சை. தேசமா? சொந்த நலனா? முக்கியம் என்பதை சந்திரிகாவே தீர்மானிக்க வேண்டும் எனக் கூறினார்.

# பொதுக்கட்டமைப்பில் சனாதிபதி எப்போது கையெழுத்திடுவார் என்பதே பிரச்சினை!

### -அமைச்சர் டிலான் பெரேரா கூறுகிறார்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் இடையேயான பொதுக் கட்டமைப்பில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்னும் சில நாட்களில் கையெழுத்திடுவார் என்று துறைமுகம் மற்றும் விமானத்துறை துணை அமைச்சர் டிலான் பெரேரா கூறியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடப்படுமா என்பது பிரச்சினையே அல்ல. எப்போது கையெழுத்திடுவது என்பதுதான் விடயம். விரைவில் கையெழுத்திடப்படும் என்றும் டிலான் பெரேரா கூறியுள்ளார். பல்வேறு தரப்பிடமிருந்து எதிர்ப்புக்கள் வந்தாலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நிலையிலிருந்து மாறமாட்டார் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் பொதுக்கட்டமைப்புக்கான மாற்று யோசனை குறித்த கேள்விக்கு பதிலளித்த பெரேரா, விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தமிழீழ விடுதலைப்புலிகள் இதில் முக்கியபாத்திரம் வகிக்கின்றார்கள். அவர்களுடன்தான் இணைந்து செயற்பட முடியும் என்பதைத் தவிர வேறு வழியில்லை எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

# மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து சேவையாளர் தென்பகுதி முழுவதும் சேவைப்புறக்கணிப்பு

### -இ.போ. சபையை மீள அமைக்க வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து சேவையாளர்கள் தென்பகுதிமுழுவதும் சேவைப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கம் அரச சேவையாளர்களுக்கு வழங்கிய 2500 ரூபா சம்பள உயர்வு தமக்கும் வழங்கவேண்டும் எனக் கோரியே இவர்கள் சேவைப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் இதனால் நாடுபூராகவும் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள சேவையாளர்கள் கொழும்பு கோட்டையில் இருந்து நிதி அமைச்சுவரை ஆர்ப்பாட்டப் பேரணியாகச் சென்று நிதி அமைச்சிடம் மகஜரொன்றைக் கையளித்துள்ளனர். தனியார் பேருந்துச் சேவையாளர்களுடன் இணைந்த சேவையை மேற்கொள்ள முடியாது எனவும் தொடர்ந்து தனியாக இயங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர்கள் மீண்டும் இலங்கைப் போக்குவரத்துச் சபையாக தமது மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனியை மாற்ற வேண்டும் எனவும் கோரியுள்ளனர். (32)

# அடிப்படை மனிதஉரிமையை மீறிய மூன்று இரகசியப் பொலிசாருக்கு தண்டனை

(கொழும்பு)

அடிப்படை மனித உரிமை மீறல் சம்பவம் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த சிறிலங்கா பொலிசார் மூவரை உயர் நீதிமன்றம் குற்றவாளிகளாகத் தீர்ப்பளித்துள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றின் நிதிக்காப்பாளரான தம்மை நிதிப் பிரச்சினை ஒன்று தொடர்பில் விசாரணைக்கு அழைத்துச். சென்ற சிறிலங்கா இரகசியப் பொலிசார் தம்மைத் தாக்கியதாகத் தெரிவித்துள்ள கந்தானைப் பகுதியைச் சேர்ந்த சுரங்க என்பவர் இதுவொரு அடிப்படை மனித உரிமை மீறல் எனத் தீர்ப்பளிக்குமாறுகோரி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்றபோது இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று இரகசியப் பொலிசாரையும் குற்றவாளிகளாகத் தீர்ப்பளித்த உயர் நீதிமன்றம் இவர்களுள் இருவர் மனுதாரருக்கு ஐயாயிரம் ரூபாவை நஷ்டஈடாகச் செலுதத வேண்டுமெனவும், மற்றைய பொலிசார் இரண்டாயிரம் ரூபாவைச் செலுததவேண்டுமெனவும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளை கிழக்கு சம்பவங்கள் பாதிக்கும்!

## உதவி வழங்கும் நிறுவனங்கள் எச்சரிக்கை

இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் அதிகரித்துவரும் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் பதற்றச் சூழல் ஆகியவை ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் என்று உதவி வழங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பு நேற்றுக் கூறியுள்ளது.

98 அமைப்புக்களின் சார்பில் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

மீளமைப்புப் பணிகளை இவை தாமதப்படுத்தும் மறுசீரமைப்புப் பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் என்றும் இத்தகைய சூழலில் தாங்கள் இயங்குவது ஆபத்தானது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கிழக்கில் தற்போதைய பதற்றச் சூழல் முன்னப்போதையும் விட அதிகரித்து இருப்பதாகவும் அந்த அறிக்கையில் கவலை தெரிவித்திருக்கிறது.

# வடக்கு-கிழக்கில் ஐரோப்பிய ஒன்றியம் நீண்டகால திட்டங்களையும் செயற்படுத்தும்

### –தெற்காசிய நாடுகளுக்கான திட்ட அதிகாரி தெரிவிப்பு

(வடமராட்சி)

வட-கிழக்குப் பகுதிகளில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் குறுகிய கால நலத்திட்டங்களிற்கு மேலதிகமாக நீண்டகால திட்டங்களையும் அமுல்படுத்த தற்போது திட்டமிடப்பட்டு வருவதாக அதன் இலங்கை மற்றும் தெற்காசிய நாடுகளிற்கான திட்ட அதிகாரி ஜிலீஸ் பேர்ட்ரன்ட் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு தனது சக அதிகாரி பிரியம் ஹோமையோன் சகிதம் வருகை தந்துள்ள அவர் நேற்று யாழ்.மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையத்திற்கு விஜயம் செய்தார். அங்கு அவர் இணையப் பிரதிநிதிகளை சந்தித்து உரையாடினார்.

குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற புனரமைப்புத்திட்டங்கள் குறுகிய கால திட்டங்களாக இருப்பதால் அவை முழுமையாக மக்களை சென்றடையாதிருப்பதாக இணையப்பிரதிநிதிகள் அங்கு கவலை தெரிவித்திருந்தனர்.

இதற்குப் பதிலளித்த ஜிலீஸ் பேர்ட்ரன்ட் எதிர்வரும் காலப்பகுதியில் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட பின் உலக வங்கியூடாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் மேற்பார்வையின் கீழேயே இங்கு உதவிகள் வழங்கப்படவுள்ளது. அவ்வுதவித் திட்டங்களை அமுல்படுத்தும் வகையில் உள்ளூர் அரசசார்பற்ற அமைப்புக்களையும், இணைத்து செயற்பட நாம் தயாராகவே இருக்கின்றோம்.

இது தொடர்பான அனைத்துத் தரப்புக்களினதும், ஆலோசனைகளையும் பெறும் நடவடிக்கையில் தற்போது நாம் ஈடுபட்டுள்ளோம் என்றார். (27)

# சிறிலங்காவுடன் பொதுநாணயமா? இந்திய அரசாங்கம் மறுப்பு

(கொழும்பு)

சிறிலங்காவிற்கும், இந்தியாவிற்கும் பொதுவான நாணய முறையை மேற்கொள்வது தொடர்பாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று இந்திய நிதித்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இந்திய ஊடகமான எக்கனாமிக்ஸ் ரைம்ஸ் இது தொடர்பான விரிவான முகப்புப் பக்கக் கட்டுரையை நேற்றுவெளியிட்டிருந்தது.

டில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடத்திய பேச்சுக்கள் குறித்த செய்திக் கட்டுரையில் இத் தகவல் இடம்பெற்றிருந்தது. இது குறித்து புதுடில்லியில் ஊடகவியலாளர்களிடம் பேசிய நிதித்துறைப் பேச்சாளர் இத்தகைய நகர்வுகள் எதுவும் நிதியமைச்சின் பரிசீலனையில் தற்போது இல்லையென்று கூறினார்.

இத்தகைய செய்திகளால் இந்தியப் பணமதிப்பில் எவ்வித தாக்கமும் ஏற்படாது என்று மும்பை பணமதிப்பீட்டுத்துறையினர் தெரிவித்தனர். ஐரோப்பிய நாடுகளுக்கு யூரோ நாணயம் இருப்பது போல் ஆசியாவுக்கும் ஒரே நாணய முறை பின்பற்றப்படவேண்டும் என்று சிறிலங்கா தரப்பில் தொடர்ந்து பலமுறை வலியுறுத்தப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## நோர்வே தூதுவருடன் சம்பந்தன் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் நேற்று நோர்வேத் தூதுவரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பின் போது ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக் கட்டமைப்பு அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை சம்பந்தன் நோர்வேத் தூதுவரிடம் வலியுறுத்தினார்.

அத்துடன் நடைமுறை அரசியல் விடயங்களும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆழிப்பேரலை மீளளிப்புப் பணிக்கு ஆஸி. மேலும் உதவி

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளுக்காக இலங்கைக்கு மேலும் எட்டுமில்லியன் டொலர்களை அளிப்பதாக அவுஸ்திரேலியா அரசு அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் அலெக்சாண்டர் டவுனர் நேற்று இதை அறிவித்தார். ஏற்கனவே அவுஸ்திரேலியா 10 மில்லியன் (7.6மில்லியன் அமெரிக்க டெலர் 6.2மில்லியன் யூரோ ) டெலர் நிதியுதவி அளிப்பதாக அறிவித்திருந்தது.

தற்போதைய அறிவிப்பை சேர்த்து மொத்தம் பதினெட்டுமில்லியன் (13.6 மில்லியன் அமெரிக்க டெலர் 11.1 மில்லியன் யூரோ ) அமெரிக்க டொலரை இலங்கைக்கு அவுஸ்திரேலியா அளித்துள்ளது.

## சீனன்...

ஆனால் இரு இளைஞர்களுக்கும் உடனடி சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதால் நினைவிழந்த நிலையில் இருப்பதாகவும் இதனால் மேலதிக தகவல் எதுவும் பெற இயலவில்லை என்றும்போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர். (25)

## பொதுக்...

உருவாக்க சனாதிபதி சந்திரிகா தொடர்ந்து முயற்சிப்பதை சுட்டிக் காட்டும் நோக்கர்கள் விடுதலைப் புலிகள் இந்தப் பொதுக்கட்டமைப்பில் இடம்பெறுவதை இந்தியா எதிர்க்கவில்லை என்றும் மறைமுகமாக ஆதரித்திருப்பதாகவும் கூறுகிறார்கள்.

அத்துடன் இந்த அறிக்கையில் பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பிற்கும் இடமளிக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இலங்கையின் போர்நிறுத்த மீறல்கள் தொடர்பாகவும், விடுதலைப்புலிகள் விமானங்களைப் பெற்றிருப்பது குறித்தும், இந்த அறிக்கையில் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் இறையாண்மை மற்றும், எல்லைப்பாதுகாப்புக் குறித்து இந்தியா மேலதிக கவனம் செலுத்தும் என்றும் இந்தக் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சேதுசமுத்திரத்திட்டம் குறித்து இருநாட்டுத் தலைவர்களும் பேசியதாகவும், இது குறித்து இருநாட்டு தொழில்நுட்பவியலாளர்கள் தொடர்ந்து ஆராய்வார்கள் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

## தம்பிலுவில்...

வடிக்கை குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சமாதான சூழ்நிலையில் படையினர் அதனைக் குழப்பும் வகையில் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் நடந்து கொள்ளவதாக விடுதலைப்புலிகள் தரப்பினர் தெரிவித்தனர். தம்பிலுவிலுள்ள விடுதலைப்புலிகளின் உபஅலுவலகமொன்றின் வேலிகளும் விசேட அதிரடிப் படையினரின் கவசவாகனம் மோதியதில் சேதமாக்கப்பட்டுள்ளது.

## விசேட...

நபர்களினால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது. அவ் வழியாக உந்துருளியில் சென்ற நபர்களே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்ததாகக் கூறப்படுகின்ற போதிலும் எவருக்கும் பாதிப்பு இல்லை எனக் கூறப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தையடுத்து அருகிலுள்ள விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து விரைந்த படையினர் பதில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்ததாகவும், அப் போது அந்த வழியாக உந்துருளியில் சென்று கொண்டிருந்த நடராஜா என்பவரும் அவரது மகனான விஜய் என்பவரும் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தமிழர்...

அமைச்சர்களினால் அளிக்கப்பட்ட வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப் படாமைக்குக் கண்டனம் தெரிவித்து நேற்று முழு அடைப்பிற்கு அழைப்பு விடுத்திருந்தமை தெரிந்ததே.

### கிளிநொச்சியில்..

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று ஹர்த்தால் உணர்வெழுச்சியோடு கடைப்பிடிக்கப்பட்டது. வர்த்தக நிலையங்கள் அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டு நகர்பகுதி ஸ்தம்பித நிலையில் இருந்தது. பிரதான வீதிகள் மற்றும் ஏனைய வீதிகளில் மக்கள் நடமாட்டம் முற்றாகத் தடைப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்தும் முற்றாக நிறுத்தப் பட்டிருந்தது.

### யாழ்.இல்.

யாழ்.குடாநாட்டிலும் நேற்றுப் பூரண ஹர்த்தால் இடம்பெற்றது. குடாநாட்டில் வாகனங்கள் எவையும் ஓடவில்லை. அரச அலுவலகங்கள், திணைக்களங்கள், கூட்டுறவு அமைப்புக்கள், வங்கிகள் மற்றும் தனியார் வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

வைத்தியசாலைகளில் வெளிநோயாளர்களின் வரவு மிகவும் குறைவாகக் காணப்பட்டன.சிறிலங்காப் படையினர் வீதிகளில் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதனிடையே மாலை ஏ-9 வீதியின் மீசாலை புத்தூர் சந்திப் பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தின் காவலரண் தொகுதியொன்று இனந்தெரியாத இளைஞர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது. முன்னதாக அப்பகுதியில் போடப்பட்டிருந்த வீதித்தடைகளை குறித்த காவலரணில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் பலவந்தமாக அப்புறப்படுத்தியுள்ளனர்.

இதனால் கோபமுற்ற இளைஞர் குழு அக்காவலரண் மீது பலத்த கல்வீச்சை மேற்கொண்டிருந்த நிலையில், அங்கு நிலைகொண்டிருந்த படையினர் தப்பித்து அருகிலுள்ள படைமுகாமிற்கு ஓடியுள்ளனர்.

அவ்வேளையிலேயே குறித்த இளைஞர்கள் அக்காவலரண் தொகுதியை தீயிட்டெரித்துள்ளனர். இச்சம்பவத்தில் முற்றாக எரிந்து போன காவலரண்முன்னரும் பல தடவைகள் இதேபோன்று தீயிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் பருத்தித்துறை முனைப் பகுதியிலும் சிறிலங்கா இராணுவக் காவலரண் ஒன்று பொதுமக்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10.30 மணியளவில் பருத்தித்துறை முனையில் உள்ள கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள காவலரண் ஒன்றே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டது.

திருமலைச்சம்பவங்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து முனைப்பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிப்புகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மக்களை விரட்டும் செயற்பாடுகளில் இராணுவத்தினர் ஈடுபட்டதால் ஆத்திரமடைந்தமக்கள் மேற்படி பகுதியில் உள்ள காவலரணிற்கு தீ வைத்தனர். இதனையடுத்து அப்பகுதியில் குவிந்த இராணுவத்தினர் காவலரணில் பற்றிய தீயை அணைத்தனர். எனினும் அப்பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவி வருகிறது.

### முல்லைத்தீவில்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் நேற்று பூரண கதவடைப்பு இடம்பெற்றது. முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு துணுக்காய் நகரப்பகுதிகள் முற்று முழுதாக ஸ்தம்பிதமடைத்திருந்தன.

### வவுனியாவில்..

வவுனியா பூரண ஹர்த்தால் காரணமாக முற்றாக செயல் இழந்தது. காலையில் இருந்து வவுனியா நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது. கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை. அரச தனியார் காரியாலயங்கள் இயங்கவில்லை. பாடசாலைகளுக்கு காலையில் ஒரு சில மாணவர்களும், ஆசிரியர்களும் சென்றபோது பின்னர் அவர்களும் திரும்பிவிட்டனர்

தனியார் போக்குவரத்து சேவை மற்றும் மக்கள் மயபடுத்தப்பட்ட பேருந்துசேவைகளும் இடம்பெறவில்லை. இதன் காரணமான வவுனியா ஏ- 9 சாலையின் செயற்பாடுகளும் முற்றாகப் பாதிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. வவுனியா நகரில் பொலிசார், இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள் நேற்று அதிகரிக்கப்பட்டிருந்தன. எனினும் எந்தவிதமான அசம்பாவிதங்களும் இல்லாத முறையில் ஹர்த்தால்அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வவுனியா கிடாச்சூரிப் பகுதியில் டயர்கள் எரிக்கப்பட்ட போது அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினருக்கும், மக்களுக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டது. இதன் பின்னர் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் தளத்திற்கு சென்று முறுகல் நிலையினை கட்டுபாடடிற்குள் கொண்டுவந்தனர்.

குருமன்காட்டுப் பகுதியில் இளைஞர் குழுவினர் மன்னார் வீதியினை வீதித் தடைகளை ஏற்படுத்தி மறித்த போது அதனை அப்பகுதியில் இருந்த பொலிசார் அகற்றியிருந்தனர்

இதேவேளை காமினி மகாவித்தியாலய முன்றலில் மின்கம்பம்போட்டு வீதி மறிக்கப்பட்டு இருந்தது. யாழ் வீதியில் பெருமளவான டயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கலகம் அடக்கும் பொலிசார் நீர்த் தாங்கி கொண்டு வந்து தீயை அணைத்ததுடன் கனரக வாகனம் கொண்டு எரிக்கப்பட்ட டயர்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

### மன்னாரில்..

மன்னார் மாவட்டமும் பூரண ஹர்த்தால் காரணமாக முற்றுமுழுதாக நேற்று செயலிழந்தது. நகரில் சிறிலங்கா படையினர் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டன.

### கிழக்கில்..

இதேவேளை,கிழக்கிலும் நேற்றுப் பூரண கதவடைப்பு இடம்பெற்றதுடன், வன்முறைச்சம்பவங்களும் நடைபெற்றதாகத் தெரியவருகின்றது.

திருகோணமலை மாவட்டம், மட்டு- அம்பாறை மாவட்டங்கள் முற்றுமுழுதாக ஸ்தம்பிதநிலையில் இருந்தன.

அம்பாறை திருக்கோவிலில் இடம்பெற்ற ஹர்த்தாலினை அடுத்து திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று நான்கு கைக்குண்டு வீச்சு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

சித்தி விநாயகர் வித்தியாலத்திற்கருகே அதிகாலை 5-30 மணியளவில் இருகைக்குண்டுகள் வீசப்பட்டன.

இதில் ஒரு குண்டு வெடித்ததுடன் மற்றது வெடிக்காததைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு வந்த விசேட அதிரடிப் படையினரால் அது செயலிழக்க வைக்கப்பட்டது.

இதேவேளை தம்பிலுவில் பிரதேசத்திலும் காலை 6-30இற்கு ஒன்றும் காலை 7 மணிக்கு ஒன்றுமாக இரண்டு கைக்குண்டுகள் வெடித்துள்ளன.

இதேசமயம் தமிழர் தாயகத்தில் ஹர்த்தால் நடைபெற்றுவரும் நிலையில் திருகோணமலையில் அன்புவழிபுரம் - அனுராதபுரச் சந்தியில் உள்ள பொதுச்சந்தையில் பெரும்பான்மை இன மக்கள் தமது கடைகளைத் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது நேற்றுக் காலை 10:10 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது. இதனால் ஆறு பேர் காயத்திற்குள்ளாகியதுடன் அவர்களில் நான்கு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இப்பகுதியில் பெரும்பதற்றம் நிலவியதுடன் படையினர் பெருமளவாகக் குவிக்கப்பட்டு வீதியில் செல்லும் சகல வாகனங்களும் சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டன.

(சோ,ச,சு,41,08,24,20,21,32,33,27,25)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது